# Volume 25

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

அவரோடேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்டபொழுது, அவரை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான். (லூக்கா 14:15)

**THE SCRIPTURE FEAST MINISTRIES**

**REV: PAUL BENJAMIN**

**FOUNDER AND AUTHOR**

**REGD OFFICE:**

**NO:104, EXTN 7 , MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM,**

**GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 .**

**TAMIL NADU, SOUTH INDIA**

**Mobile : + 91 94456 35860 +91 73583 23277**

**Web : www.scripturefeast.net, Blog : www.scripturefeast.info**

**Email: scripturefeast@gmail.com**

**FOREWORD**

**PASTOR : A. THOMAS RAJ**

**PRESIDENT, APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து ஊழியங்கள்

1.பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலானவைகள்

2.பல ஆங்கில பதிப்பு வேதாகமத்துடன் ஒப்பிடக்கூடியவைகள்

3.தேவ நாமத்துடன் பல தேவ தரிசனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டவைகள்.

4.பெரிய மதங்களையும் அதன் உட்பிரிவுகளையும் உள்ளடக் கியவைகள்.

5.வேதத்தின் அடிப்படை உபதேசங்களை அஸ்திபாரமாகக் கொண்டவைகள்

6. மெய்யான தேவ ஞானத்தை எளிமையாக கற்றுக் கொள்ளும் வழி முறைகள்.

7.தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களுக்கு ஜெயங்கொள்ளு வதற்காக தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து.

8.வேதாகம மையக்கருத்துக்கள் அதன் இணையான தேவ வார்த்தைகளுடன் இரண்டறக் கலப்பவைகள்.

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

## தலைப்பு இருபத்தைந்து

## **தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள்**

பொருளடக்கம்

1 நியாயப் பிரமாணத்தின் மூலம் **தேவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரமாணங்கள்**

2 இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தின் மூலம் **தேவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரமாணங்கள்**

3 **உப்பின் குணாதிசயங்களோடு தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள் ஒப்பிடப்படுகிறது**

4 போஜனபானபாத்திரங்களின் **குணாதிசயங்களோடு தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள் ஒப்பிடப்படுகிறது**

5 **வஸ்திரங்களின் குணாதிசயங்களோடு தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள் ஒப்பிடப்படுகிறது**

6 **விவாக உடன்படிக்கையின் குணாதிசயங்களோடு தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள் ஒப்பிடப்படுகிறது**

7 **பாதரட்சைகளின் குணாதிசயங்களோடு தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள் ஒப்பிடப்படுகிறது**

**8 முதலாம் உடன்படிக்கையின் பழைய ஏற்பாடு** V/S **இரண்டாம் உடன்படிக்கையின் புதிய ஏற்பாடு**

**FOREWORD**

**PASTOR : A. THOMAS RAJ**

**PRESIDENT, APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

# The Scripture Feast Ministries (Regd)

## Rev Paul Benjamin, Founder and Author

For the Predestinate Conquering

@ One among the 1000 generation
The Bride in 1000 years kingdom


**REGD OFFICE:**

**NO:104, EXTN 7, MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM,**

**GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 .**

**TAMIL NADU, SOUTH INDIA**


**மதிப்புரை / Foreword**

*JESUS NEVER FAILS*
*"TO MAKE READY A PEOPLE PREPARED FOR THE LORD"*

**APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

'Speak evil no man (Titus 3:2)' (Regd.No. 80 of 1957) 'Follow peace with all men

(Heb. 12.14)**'**

**Founder : Pastor G. SUNDRAM** **Chief Pastor : M.K.SAM SUNDARAM**

**Pastor . A. THOMASRAJ** **G.SUKUMAR SAMUEL** **K.R. SELWIN**
President Hon.secretary Treasurer

*The grass withers, the flower fades,*
*But the word of our God stands forever. " Isa. 40:8*

The Word of God is blameless, faultless, without defect, deserving no censure. And the Word of God has to be Preached to all People. All over the Earth with conviction and clarity for the edification of the hearers.

Careful study and meditation of the Scriptures when undertaken with the grace of God depending on the Holy Spirit's guidance will bring hidden truths to light.

The work and efforts of Bro. Paul Benjamin in this regard is commendable. I appreciate his passionate toil in the Lord's Kingdom. My prayers are that his teaching and writing will profit and prepare many for the coming of our Lord and savior Jesus Christ. Amen.

Pastor A. Thomasraj
President
Apostolic Christian Assembly

No. 26. Shanmugarayan Street, Purasawalkam, Chennai – 600 007. ☎ : 26622775/ 26635583
Email :- info@acapryaerhouse.org, Web site : www. acaprayerhouse.org

# முன்னுரை

மனிதன் மாம்ச சரீரத்தில் வாழ்வதற்கு அவனுக்கு காற்று,தண்ணீர், போஜனம், வஸ்திரம், குடியிருப்பு எப்படி ஒவ்வொருவருக்கும் அடிப்படை முக்கியமான தேவைகளோ; அது போலவே ஆவிக் குரிய மனிதன் வாழ்வதற்கு இந்த ஐந்து அடிப்படை தேவைகள் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய வார்த்தைகளின் மூலம் மிக முக்கியமானது. இவைகளை உள்ளான ஆவிக்குரிய மனிதனின் ஐந்து ஆவிக்குரிய அடிப்படை தேவைகளை; புறம்பான மனிதனின் ஐந்து அடிப்படை தேவைகளோடு ஒப்பிட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| மாம்ச சரீரத்தின் தேவைகள்:- | | ஆவிக்குரிய சரீரத்தின் தேவைகள்:- |
|---|---|---|
| ஜீவ சுவாசம் | 1 | பரிசுத்த ஆவி |
| தண்ணீர் | 2 | நித்திய ஜீவத்தண்ணீர் |
| போஜனம் | 3 | நித்திய ஜீவ வார்த்தைகளின் போஜனம் |
| வஸ்திரம் | 4 | நீதியின் வஸ்திரம் |
| குடியிருப்பு | 5 | பரலோக வாசஸ்தலம் |

இவைகளை உட்கொள்ளும் அளவு அவரவர் தன்மைக் கேற்றபடி மாறுபடுகிறது. இந்த ஐந்து தேவைகள் குறையும்போதோ, அல்லது தேவைப்படும் போதோ, சரீரமானது இவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது. எப்படி மாம்ச சரீரம் தன்னு டைய தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறதோ, அது போலவே ஆவிக்குரிய சரீரமும் இவைகளை ஆவிக்குரிய நிலை யில் அவரவர் தன்மைக்கேற்றபடி பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது.

மனச்சாட்சியை தேவன் மனிதனுக்கு கொடுத்து அதன் மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் அவன் தேவனுடன் ஆவியில் தொடர்பு கொண்டு தன்னுடைய ஆத்துமாவின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம், மேலும் இவைகளுக்காக மனச்சாட்சியில் அறிவு, புத்தி, ஞானம் இவைகளை தேவன் மனிதனுக்கு அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். ஒருவன் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி நீண்ட தூரம் பயணம் செய்யவோ அல்லது மிக கடினமாக வேலை செய்யவோ தேவையில்லை.

ஆத்துமாக்களின் பிதாவாகிய தேவன் மனிதனுக்கு மிக அருகிலும் மிக எளிமையாகவும் தன் ஆத்துமாவின் தேவைகளை சந் திக்கும்படி தேவ வார்த்தைகளை தேவன் நமது இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாக வைத்திருக்கிறார்.

மனச்சாட்சியில் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள் வது பொதுவான இரட்சிப்பு, மேலும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை ஏற்றுக் கொள்வது விசேஷ இரட்சிப்பு

விசேஷ இரட்சிப்பின் ஆவிக்குரிய நிலமைகள்:-

1.ஜலத்தினால் மறுபடியும் பிறப்பு/ தேவனுடைய வார்த்தைகளினால் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தை விசுவாசக் கண்களால் பார்ப்பது.

2. ஆவியினால் மறுபடியும் பிறப்பு / தேவனுடைய வார்த்தைகளினாலும் பரிசுத்த ஆவியினாலும் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே விசுவாசக் கண்களால் பிரவேசிப்பது.

3. மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்/ மறுபடியும் பிறந்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்.

4. பலமான ஆகாரம்/ தீமையை வெறுத்து, நன் மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைந்து நீதியின் வசனத்தை பகுத்தறியும் ஞானத்தை அடைதல்.

5. பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் / உவமைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவதினால் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித் தத்தை / பங்களிப்பை அறிந்து கொள்ளுதல்.

6. தங்களுடைய விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன் னேறும் போது அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவனுடைய சித் தத்தையும் அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல்

7. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து/ இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழா வில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தியமான வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சியின் பதவியை பரிசாகப்பெற்று, அல்லேலூயா என்று கெம்பீர சத்தத்தோடு ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துதல்.

8. மரணத்தை ஜெயமாக விழுங்குதல்/தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து அதன் கிரியைகளின் மூலம் அழிவுள்ளது அழியாமை யையும் சாவுள்ளது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.

பொதுவான இரட்சிப்பும் மற்றும் விசேஷ இரட்சிப்பின் வளர்ச்சிப் படிகளும் மிக எளிமையான முறையில் தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டு புரிந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபையினால் இந்த தேவனுடைய சத்தியமான வசனங்களின் விருந்தை பல ஆங்கில மொழிப் பதிப்பு வேதாகமங்களுடனும் மற்றும் அவரவர் சொந்த தாய்மொழி வேதாகமங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்க்க தரிசன வசனங்களின்படி ஜலத்தினால் சமுத்திரம் நிறைந்திருப்பது போல பூமி கர்த்தரைக் குறித்து அறிகிற அறிவால் நிறைந்திருக்கும் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

இந்த தீர்க்க தரிசன வசனத்தின் படி இந்த வசனங்களை வாசிக்கிறவன், கேட்கிறவன் இதில் எழுதியுள்ளவற்றை கைக்கொள்கிறவன் பாக்கியவான். இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி ஏற்கனவே உங் களுக்கு அறிவிக்கப்பட்ட தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டே மீண்டும் இவைகள் இப்பொழுது; பத்து தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் விவரிக்கப்பட்டு, உங்களுக்கு அறிவிக் கப்பட்டு வருகிறது.

இந்த தீர்க்கதரிசன வசனத்தின்படி பொதுவான இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் எழுதும்போது, பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைக்குறித்து எழுதுவது நலமாக கண்டது இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி தங்களது பெயர் பூமியில் எழுதப்படாமலும், ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்ட பெயர் அழிக்கப்படாமலும், ஞாபக புஸ்தகத்தில் பெயர் எழுதப்படும் படியாகவும் இவைகளை மீண்டும் ஞாபகப் படுத்திக்கொள்வோம் ஆமென்.

## ஆசிரியர் உரை

மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் இராஜாவாக வெளிப் படப்போகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் உள்ள விசுவாசத்தில் தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைத்து, அவருடன் விசுவாச உடன்படிக்கை செய்து, அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அவர் இராஜாவாக முடிசூட்டப்படும் தன்னுடைய பட்டாபிஷேக விழாவிற்கு அழைத்து அவர்களுக்கு தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாகக் கொடுத்து, அவர்களின் கிரியை களின்படி பிரதிபலனை பரிசாக அளிக்கிறார்.

இந்த நற்செய்தியை தேவனுடைய தரிசனமாகவும், அழைப் பிதழாகவும் எழுதி அனுப்பி இதன் பயனாக தேவனால் முன் குறிக் கப்பட்ட பரிசுத்தவான்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை செய்கிறவர்களாக, இந்த தலைமுறையில் எழும்பும்படி நாங்கள் தரிசனம் நிறைவேற ஜெபத்துடன் ஊழியம் செய்து கொண்டு வருகிறோம்.

தேவ வார்த்தைகளை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்டபடியால்; தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவின்படி தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மனம் புதிதாகிறதினாலே ஆவியில் மறுரூபம் அடைந்து தேவ தரிசனத்தைப் பெற்றேன்.

தரிசனம் :- கர்த்தர் எனக்கு பிரதியுத்திரமாக : நீ தரிசனத்தை எழுதி, அதை கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகையிலே தீர்க்க மாக வரை.

எழுத்தின்படி பொருள் :- காகிதம், தோல்சுருள், கற்பலகை உலோகத்தினாலான பலகை இவைகளில் தேவ தரிசரினத்தை எழுதி அறிவிப்பது.

ஆவியின்படி பொருள் :- தேவ வார்த்தைகளை வாசிப்பது, கேட்பது, ஆலோசனையாக ஏற்றுக்கொள்வது, விசேஷ பயிற்சிகளினால் உணர்ந்து கொள்ளுவது ஆகியவற்றின் மூலம் சதையாகிய இருதயப்பலகையின் மேல் தேவ தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

ஞான அர்த்தத்தின்படி பொருள் :- கணினியின் கடந்தோடுகிற திரையில் தரிசனத்தை வாசிக்கும்படி கணினியின் விசைப்பலகை யிலே தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

தரிசனத்தை மிக சுருக்கமாகவும், வெளிப்படையாகவும், வேதத்தில் உள்ளபடி அவரவர் கேட்டறியும் அளவிற்கேற்றபடி எழுதி, அவைகளை எழுத்தின்படி, ஆவியின் படி, ஞான அர்த்தத்தின்படி ஆகிய மூன்று வழிகளிலும் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தில் பங்கடையும்படி அழைப் பிதழ்களை அனுப்பும் இந்த ஊழியத்திற்காக தேவைகள் அநேகம் உண்டு.

இப்படிப்பட்ட பல கிருபை வரங்கள், ஊழியதரிசனங்கள் மற்றும் பல ஆசீர்வாதங்கள், தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்து வின் அவயவங்களான நமக்கு தேவ ஆவியானவர் பகிர்ந்து கொடுத் திருக்கிறார்.

கிறிஸ்துவாகிய தலையைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவின் அவயவமான எங்கள் ஊழியம் அதன் முழு பெலத்துடன் பொரு ளாதார ஆசீர்வாதங்களை பெற்று செயல்பட முயற்சி செய்து பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற கிறிஸ்துவின் அவயவங்களான நீங்களும் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல எங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தேவன் பகிர்ந்து கொடுத்த சித்தத்தை நிறைவேற்றும்படி கிறிஸ்துவின் அவயங்களை இசைவாகக்கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவிற்குத்தக்கதாக கிரியைகளை செய்யும் போது; அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாகு வதற்கேதுவான முழு சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. இப்படி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறை வேற்றி தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம். அல்லேலூயா, ஆமென்.

## பொருளடக்கம் -1

1-0 தேவனாகிய கர்த்தர், கிழே குறிப்பிட்ட சில மூல காரணங்களினால் தீர்க்கதரிசியாகிய மோசேயினிடத்தில், முதலாம் உடண்படிக்கையின் பழைய ஏற்பாடு; வெளிப்படுத்தப்படுகிறது.

1-1 சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் தமக்கு சொந்தமான ஜனங்களை பிரித்தெடுப்பதற்கான வழிமுறைகளை, தேவன் ஜனங்களுக்கு வெளிப்படுத்தவில்லை:-

1-2 யேகோவா என்னும் என் நாமத்தினால் தேவன் தமக்கு சொந்தமான ஜனங்களை பிரித்தெடுப்பதற்காக வழிமுறைகள் ஜனங்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது:-

1-3 சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் மனசாட்சி பிரமாணத்தை பின்பற்றுகிறவர்களின், விக்கிரக ஆராதனை குற்றமாகவோ, பாவமாகவோ, தேவனால் அறிவிக்கப்படவில்லை:-

1-4 சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் மனசாட்சி பிரமாணத்தை பின்பற்றி, தேவனை பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தேவன் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணுகிறார்:-

1-5 சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் மனசாட்சி பிரமாணத்தை பின்பற்றி, தேவனை பற்றி உத்தம இருதயத்தோடு இல்லாதவர்கள், மனிதர்களால் உருவாக்கப்பட்ட தேவர்களையும் ஆராதனை செய்துகொண்டிருக்கிறார்கள்:-

1-6 தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி கிறிஸ்து வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது:-

1-7 ஆபிரகாமின் சந்ததிகள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளுகிறதற்காக; தீர்க்கதரிசியாகிய

மோசேயினிடத்தில், முதலாம் உடண்படிக்கையின் பழைய ஏற்பாடு மூலம் தேவன் தமக்கு சொந்தமான ஜனங்களாக பிரித்தெடுக்கிறார்:-

1-8 தேவனாகிய கர்த்தர், தீர்க்கதரிசியாகிய மோசேயினிடத்தில், முதலாம் உடண்படிக்கையின் பழைய ஏற்பாடு மூலம்: கட்டளையிட்டவைகளையும், கட்டளையிடாதவைகளையும் கலந்து பின்பற்றுகிறவர்களை தேவன் புறஜாதிகளாக பிரித்தெடுக்கிறார்:-

1-1 சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் தமக்கு சொந்தமான ஜனங்களை பிரித்தெடுப்பதற்கான வழிமுறைகளை, தேவன் ஜனங்களுக்கு வெளிப்படுத்தவில்லை:-

ஆதாம் முதல் மோசே வரைக்கும்; உள்ள சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்கள் வரையுள்ள காலத்தில் சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் முற்பிதாக்களுக்கு வெளிப்பட்ட நாட்களில்; தேவனுடைய ஆசரிப்பு முறைகளையும், தேவனுடைய ஆராதனை முறைகளையும், கட்டளையிட்டு, அவைகளினால் தமக்கு சொந்தமான ஜனங்களை பிரித்தெடுப்பதற்கான வழிமுறைகளை, தேவன் ஜனங்களுக்கு வெளிப்படுத்தவில்லை.

1-2 யேகோவா என்னும் என் நாமத்தினால் தேவன் தமக்கு சொந்தமான ஜனங்களை பிரித்தெடுப்பதற்காக வழிமுறைகள் ஜனங்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது:-

தேவனாகிய கர்த்தர், தீர்க்கதரிசியாகிய மோசேயினிடத்தில், யேகோவா என்னும் என் நாமத்தினால் வெளிப்பட்டு முதலாம் உடண்படிக்கையின் பழைய ஏற்பாடு மூலம்: தேவனுடைய ஆசரிப்பு முறைகளையும், தேவனுடைய ஆராதனை முறைகளையும், கட்டளையிட்டு அவைகளினால் தேவன் தமக்கு சொந்தமான ஜனங்களை பிரித்தெடுப்பதற்காக வழிமுறைகள் ஜனங்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

1-3 சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் மனசாட்சி பிரமாணத்தை பின்பற்றுகிறவர்களின், விக்கிரக ஆராதனை குற்றமாகவோ, பாவமாகவோ, தேவனால் அறிவிக்கப்படவில்லை:-

சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நம்முடைய முற்பிதாக்களுக்கு அறியப்பட்ட நாட்களில், தேவனுடைய ஆசரிப்பு முறைகளையும், தேவனுடைய ஆராதனை முறைகளையும், தேவனால் மனிதர்களுக்கு வெளிப்படுத்தப்படாத காலத்தில்:

மனிதனுடைய மனசாட்சி பிரமாணத்தை பின்பற்றி, தங்களுடைய விசுவாசத்தினால் உருவாக்கப்பட்ட ஆசரிப்பு முறைகளையும், ஆராதனை முறைகளையும் கலந்து; ஜனங்கள் தங்கள் விருப்பத்திற் கேற்றபடி ஒரு மனிதனாகவோ / ஒரு குடும்பமாகவோ /

ஒரு வம்சமாகவோ / ஒரு குலமாகவோ / ஒரு கோத்திரமாகவோ தேவனை ஆராதனை செய்து கொண்டிருந்தார்கள். இப்படி மனசாட்சி பிரமாணத்தை பின்பற்றுகிற இந்த நாட்களில், விக்கிரக ஆராதனை குற்றமாகவோ, பாவமாகவோ, தேவனால் அறிவிக்கப்படவில்லை.

1-4 சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் மனசாட்சி பிரமாணத்தை பின்பற்றி, தேவனை பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தேவன் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணுகிறார்:-

தேவனை பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியுல்லவர்களாக இருக்கிறவர்கள்;

சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் மனசாட்சி பிரமாணத்தை பின்பற்றுகிற இந்த நாட்களில், நம்முடைய முற்பிதாவாகிய ஆபிரகாம் பரலோகத்தில் உள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளுக்கு / சத்தியத்திற்கு மாறக்கூடிய ஒரு சில ஆசரிப்பு முறைகளையும், ஆராதனை முறைகளையும் தன்னுடைய விசுவாசத்தினால் தேர்ந்தெடுத்து அவைகளை நிதானித்து, பகுத்தறிந்து கொண்டு,

நேரடியாகவும், நிழலாட்டமாகவும் தேவனுக்கு ஆராதனையாக செலுத்தினபடியால் சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: ஆபிரகாமின் மூலமாக ஆபிரகாமின்

சந்ததிகளுக்கு வாக்குத்தத்தத்தையும் உடன்படிக்கையையும் ஏற்படுத்துகிறார். Heb_6:13, Heb_6:16-18; Gen_14:18-20,Gen_22:15-18; Heb_7:1-5, Heb_7:6-10 , Heb_11:8,

1-5 சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் மனசாட்சி பிரமாணத்தை பின்பற்றி, தேவனை பற்றி உத்தம இருதயத்தோடு இல்லாதவர்கள், மனிதர்களால் உருவாக்கப்பட்ட தேவர்களையும் ஆராதனை செய்துகொண்டிருக்கிறார்கள்:-

தேவனை பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவர்களாக இருக்கிறவர்கள்;

மனசாட்சி பிரமாணத்தை பின்பற்றுகிற இந்த நாட்களில், மனிதனுடைய விசுவாசத்தினால் உருவாக்கப்பட்ட ஆசரிப்பு முறைகளையும், ஆராதனை முறைகளையும் பின்பற்றுகிறவர்கள்:

அவைகளின் நிழலாட்டமானவைகளிலிருந்து பரலோகத்தில் உள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளுக்கு / சத்தியத்திற்கு மாறக்கூடாதவைகளை நிதானித்து, பகுத்தறிந்து கொள்ளாமல் ஆராதனையாக செலுத்துகிறவர்கள் மனிதர்களையும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட தேவர்களையும் ஆராதனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

1-6 தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி கிறிஸ்து வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது:-

Gal 3:19 அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது.

Gal 3:20 மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல, தேவனோ ஒருவர்.

Gal 3:21 அப்படியானால், நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக்

கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே.

Gal 3:22 அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது. Gal 3:15-20; Gal 3:21-24; Rom 5:12-14;

1-7 ஆபிரகாமின் சந்ததிகள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளுகிறதற்காக; தீர்க்கதரிசியாகிய மோசேயினிடத்தில், முதலாம் உடண்படிக்கையின் பழைய ஏற்பாடு மூலம் தேவன் தமக்கு சொந்தமான ஜனங்களாக பிரித்தெடுக்கிறார்:-

சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நம்முடைய முற்பிதாக்களுக்கு அறியப்பட்ட நாட்களில், ஆபிரகாமுக்குத் தேவன் ஆணையிட்டு அருளின வாக்குத்தத்தம் நிறைவேறுங்காலம் நானூற்று முப்பது வருஷத்திற்குப் பின்பு வருகிறபோது;

தேவனாகிய கர்த்தர், யேகோவா என்னும் நாமத்தினால் தீர்க்கதரிசியாகிய மோசேயினிடத்தில், முதலாம் உடண்படிக்கையின் பழைய ஏற்பாடு மூலம்: ஆபிரகாமின் சந்ததிகளுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தையும் உடன்படிக்கையையும் நிறைவேற்றுவதற்காக,

பரலோகத்தில் உள்ளவைகளுகு வரப்போகிற நன்மைகளின் பொருளுக்கு / சத்தியத்திற்கு மாறக்கூடியவைகளாக இருக்கிற நிழலாட்டமான தேவனுடைய ஆசரிப்பு முறைகளையும், தேவனுடைய ஆராதனை முறைகளையும், கட்டளைகளாக வெளிப்படுத்தப்படுகிறதின் மூலம் ஆபிரகாமுக்குத் தேவன் ஆணையிட்டு அருளின வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்து கொள்ளுவதற்காக ஜீவப்பிரமாணங்களை கொடுத்தார்.

இவைகளுடன் ஆதாமின் மீறுதலினால், ஆதாம் முதல் மோசே வரைக்கும்; பாவஞ்செய்யாதவர்களையும் மரணமானது ஆண்டுகொண்டிருந்த படியால், முதலாம் உடண்படிக்கையின் மூலம் பாவிகளுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டு: அவைகளின்

**நன்மை தீமைகள் மூலம், பாவம் செய்கிறவர்களுக்கு மரணத்தை ஆளுகை செய்யும் வல்லமைகள் கணக்கிடப்பட்டு, நியத்தீர்ப்புகள் கொடுக்கப்பட்டது.**

**ஆகையால் இதுமுதற்கொண்டு இவைகளை பின்பற்றி நிதானித்து, பகுத்தறிந்து கொண்டு இவைகளின் மூலம் தேவனுக்கு ஆராதனையை செலுத்துகிறவர்களை தேவன் தமக்கு சொந்தமான ஜனங்களாக பிரித்தெடுக்கிறார்** Act 7:17,Eze 20:23-25,1Ti 1:9-11; Act 7:38, Deu 33:2; Deu 4:13-14; Deu 5:28-33; Deu 6:1-2; Rom 9:30-33;

**1-8 தேவனாகிய கர்த்தர், தீர்க்கதரிசியாகிய மோசேயினிடத்தில், முதலாம் உடண்படிக்கையின் பழைய ஏற்பாடு மூலம்: கட்டளையிட்டவைகளையும், கட்டளையிடாதவைகளையும் கலந்து பின்பற்றுகிறவர்களை தேவன் புறஜாதிகளாக பிரித்தெடுக்கிறார்:-**

**தேவனாகிய கர்த்தர், தீர்க்கதரிசியாகிய மோசேயினிடத்தில், முதலாம் உடண்படிக்கையின் பழைய ஏற்பாடு மூலம்: தேவன் கட்டளையிடாத ஆசரிப்பு முறைகளையும், ஆராதனை முறைகளையும், பின்பற்றுகிறவர்கள் அவைகளின் நிழலாட்டமானவைகளிலிருந்து பரலோகத்தில் உள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளுக்கு / சத்தியத்திற்கு மாறக்கூடாதவைகளை நிதானித்து,**

**பகுத்தறிந்து கொள்ளாமல் ஆராதனை செய்கிறவர்கள் மனிதர்களையும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட தேவர்களையும் ஆராதனை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் இதுமுதற்கொண்டு இவர்களை தேவன் புறஜாதிகளாக பிரித்தெடுக்கிறார்.**

2-0 நியாயப்பிரமாணத்தின் மூலம் வருகிற தேவனுடைய இரட்சிப்பின் பிரமாணங்கள்

2-1 நியாயப்பிரமாணத்தின் மூலம் வருகிற தேவனுடைய இரட்சிப்பின் பிரமாணம்

2-2 நியாயப்பிரமாண இரட்சிப்பின் பிரமாணம்

2-3 நியாப்பிரமாணத்தில் சாட்சியிருக்கிற மூலக்காரணிகள்

2-4 நியாயப்பிரமாணம் இருதயத்தில் சாட்யிருக்கிற படியால் வெளிப்பட்ட நன்மைகளின் கிரியைகள்

2-5 நியாயப்பிரமாணம் வாயினால் சாட்சியிடுகிற படியால் வெளிப்பட்ட தீமைகளின் கிரியைகள்

2-6 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொள்ளும் வழி முறைகள்

2-7 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொண்டவர் களின் பிரதிபலன்கள்

2-8 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொள்ளாத வர்களின் பிரதிபலன்கள்

2-1 நியாயப்பிரமாணத்தின் மூலம் வருகிற தேவ னுடைய இரட்சிப்பு :-

பொதுவான இரட்சிப்பு / ஜாதிகளின் இரட்சிப்பு ஆவி, ஆத்துமா மட்டும் அக்கினி நரகத்திலிருந்து இரட்சிப்பை பெற்றுக் கொண்டு; சரீரம் பாதாளத்தின் வல்லமையினால், தேவனுடைய ரூப மும், சாயலையும் பெற்றுக் கொள்ளாமல் மரணமடைகிறது.

Jud 1:3, 1Co 3:11-15, 1Co 5:1-5, 1Co 15:35-38, 1Co 15:39-46, Psa 49:14, Job 18:14 , Job 14:7,

2-2 நியாயப்பிரமாண இரட்சிப்பின் பிரமாணம் :-

நியாயப்பிரமாணம் / மனசாட்சிப் பிரமாணம் / ஜாதிகளின் பிரமாணம் / பத்து கட்டளைகள் சீனாய் மலையில் உண்டான உடன் படிக்கை Lev 18:5, Rom 10:5, Gal 4:21-25, Gal 4:26-31,Gal 3:20, 1Ti 1:9-11, Eze 20:25,

2-3 நியாயப்பிரமாணத்தில் சாட்சியிருக்கிற மூலக் காரணிகள் :-

நியாயப்பிரமாணத்தின் மூலம் நன்மை + தீமைகள் இருதயத் தில் சாட்சியிருக்கிறது.

மனசாட்சியின் மூலம் குற்றமுண்டு + குற்றமில்லை என்று இருதயத்தில் சாட்சியிருக்கிறது. Rom 2:14-15, Rom 2:27,Rom 7:7-13, Deu 30:14-15 , Mic 6:8-9,

2-4 நியாயப்பிரமாணம் இருதயத்தில் சாட்யிருக்கிற படி யால் வெளிப்பட்ட நன்மைகளின் கிரியைகள்:-

நியாயப்பிரமாணம் இருதயத்தில் சாட்யிருக்கிற படியால், நியாப்பிரமாணத்தின் மூலம் வருகிற சுய நீதியினால் மனுஷர்களுக்கு முண்பாக நீதிமான், ஆனால் இது தேவனுக்கு முன்பாக நீதிமான் அல்ல.

நியாயப்பிரமாணம் ஒரு பள்ளி ஆசிரியராக இருந்து கொண்டு கிறிஸ்துவின் விசுவாச நீதிக்கு வழி நடத்துகிறது.

Gal 2:15, Gal 3:10-12,Gal 3:19-25, Rom 3:19-22, Phi 3:9-11,

2-5 நியாயப்பிரமாணம் வாயினால் சாட்சியிருக்கிற படியால் வெளிப்பட்ட தீமைகளின் கிரியைகள் :-

நியாயப்பிரமாண வார்த்தைகளை வாயினால் சாட்யிடு கிறவர்களுக்கு, நியாயப்பிரமாணத்தினுடைய நீதியின் கிரியைகள் இல்லாமலிருந்து; பாவத்தினால் ஆவி, ஆத்துமாவில் மரணம் ஏற்பட்டு, நியாயப்பிர மாணத்தின் சாபங்கள் அவர்களை பின் தொடருகிறது

Gal 3:10, Rom 2:6-12, Rom 2:17-24,Rom 2:25-29, Rom 7:5, Rom 7:14-25,Eph 2:1-3,

2-6 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொள் ளும் வழி முறைகள் :-

நியாயப்பிரமாணத்தின் மூலம் வெளிப்பட்ட தீமைகளை நன்மையினால் ஜெயங்கொண்டு கரும பாவங்களை ஜெயங்கொள் ளுவது / கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் பாவத்தை, மாம்சத்திலே பலி செலுத்துவதால் நியாயப்பிரமாண நிதியை நிறை வேற்றுவது. Rom_8:1-4, Rom_8:5-11, Rom_10:5,Lev_18:5, 1Pe_3:16-18, 1Pe_4:16, 2Pe_2:19, Rom_2:25-29,

2-7 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொண்ட வர்களின் பிரதிபலன்கள்:-

ஆவி, ஆத்துமா இரண்டாம் மரணமாகிய அக்கினி நரகத்தி லிருந்து விருதலையாக்கப்படுகிறது ஆனால் சரீரம் முதலாம் மரண மாகிய பாதாளத்தின் வல்லமைகளை ஜெயங்கொள்ள முடியாத படியால் சரீரம் தேவனுடைய ரூபத்திலும் சாயலிலும் மரணமடைந்து, மிருக சாயலை பெற்றுக் கொள்ளுகிறது

1Co_5:1-5, 1Co_15:35-38,1Co_15:39-44, Mat_6:25, Psa_49:14 , Job_18:5-14, Job_18:15-21,

2-8 நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஜெயங்கொள்ளாதவர்களின் பிரதிபலன்கள் :-

மனச்சாட்சிப் பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தை கைக் கொள்ளாதபடியால், பாவம் இவர்களை ஜெயங்கொள்ளுகிறது, இதனால் ஆவி, ஆத்துமா, சரீரம் மரணமடைகிறது; இவர்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்த கமும் எரிகிற அக்கினி கடலில் தள்ளப்படுகிறது.

Rom_2:11-12, Rom_5:20-21, Gal_3:10, Heb_10:28, Jam_2:8-13, Jam_4:11-12,

3-0 முதலாம் உடன்படிக்கை V/S இரண்டாம் உடன்படிக்கை

**3-1 ஆபிரகாமின் சந்ததிகள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளுகிறதற்காக; தீர்க்கதரிசியாகிய மோசேயினிடத்தில், முதலாம் உடண்படிக்கையின் பழைய ஏற்பாடு மூலம் தேவன் தமக்கு சொந்தமான ஜனங்களாக பிரித்தெடுக்கிறார்:-**

சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நம்முடைய முற்பிதாக்களுக்கு அறியப்பட்ட நாட்களில், ஆபிரகாமுக்குத் தேவன் ஆணையிட்டு அருளின வாக்குத்தத்தம் நிறைவேறுங்காலம் நானூற்று முப்பது வருஷத்திற்குப் பின்பு வருகிறபோது;

தேவனாகிய கர்த்தர், யேகோவா என்னும் நாமத்தினால் தீர்க்கதரிசியாகிய மோசேயினிடத்தில், முதலாம் உடண்படிக்கையின் பழைய ஏற்பாடு மூலம்: ஆபிரகாமின் சந்ததிகளுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தையும் உடன்படிக்கையையும் நிறைவேற்றுவதற்காக,

பரலோகத்தில் உள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளுக்கு / சத்தியத்திற்கு மாறக்கூடியவைகளாக இருக்கிற நிழலாட்டமான தேவனுடைய ஆசரிப்பு முறைகளையும், தேவனுடைய ஆராதனை முறைகளையும், கட்டளைகளாக வெளிப்படுத்தப்படுகிறதின் மூலம் ஆபிரகாமுக்குத் தேவன் ஆணையிட்டு அருளின வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்து கொள்ளுவதற்காக ஜீவப்பிரமாணங்களை கொடுத்தார்.

இவைகளுடன் ஆதாமின் மீறுதலினால், ஆதாம் முதல் மோசே வரைக்கும்; பாவஞ்செய்யாதவர்களையும் மரணமானது ஆண்டுகொண்டிருந்த படியால், முதலாம் உடண்படிக்கையின் மூலம் பாவிகளுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டு: அவைகளின் நன்மை தீமைகள் மூலம், பாவம் செய்கிறவர்களுக்கு மரணத்தை ஆளுகை செய்யும் வல்லமைகள் கணக்கிடப்பட்டு, நியத்தீர்ப்புகள் கொடுக்கப்பட்டது.

ஆகையால் இதுமுதற்கொண்டு இவைகளை பின்பற்றி நிதானித்து, பகுத்தறிந்து கொண்டு இவைகளின் மூலம் தேவனுக்கு ஆராதனையை செலுத்துகிறவர்களை தேவன் தமக்கு சொந்தமான ஜனங்களாக பிரித்தெடுக்கிறார் Act 7:17,Eze 20:23-25,1Ti 1:9-11; Act 7:38, Deu 33:2; Deu 4:13-14; Deu 5:28-33; Deu 6:1-2; Rom 9:30-33;

3-2 ஆபிரகாமின் சந்ததிகள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளுகிறதற்காக; இயேசு கிறிஸ்துவின் மூலம்

இரண்டாம் உடண்படிக்கையின் புதிய ஏற்பாட்டினால் தேவன் தமக்கு சொந்தமான ஜனங்களாக பிரித்தெடுக்கிறார்:-

ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி கிறிஸ்து வருகிறபோது, ஆபிரகாமின் சந்ததிகள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளுகிறதற்காக; தேவன் வார்த்தையிலிருந்து மாம்சமாகமாறி,

இயேசு கிறிஸ்து என்னும் நாமத்தில் ஜனங்களுக்கு நேரடியாக வார்த்தையின் மூலம் வெளிப்பட்டு, பரலோகராஜ்யத்தின் உவமைகளின் இரசியங்கள் மூலமாக பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற உன்மையான நன்மைகளுக்குரிய நேரடியான பொருளாகிய சத்தியங்களை, வெளிப்படுத்தின பின்பு,

இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின்படி, பரலோகத்தில் உள்ளவைகளுக்கு சாயலானவைகளையும், நிழலாட்ட மானவைகளையும், இரத்தஞ்சிந்துதலினாலே சுத்திகரிக்கப்படும் வழிமுறைகளினால்: பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரண பலிகளையும், நிறைவேற்றுவதற்காக,

கொல்கோதா, மலையின் மேல் தன்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவைகளை பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற உன்மையான நன்மைகளுக்குரிய நேரடியான பொருளாகிய சத்தியங்களை நிருபித்து வெளிப்படுத்தினபடியால்

முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

முதலாம் ஆதாம் முதல், இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து வரைக்கும், பாவஞ்செய்யாதவர்களையும், ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்

**ஆண்டுகொண்டிருந்த படியால், இரண்டாம் உடண்படிக்கையின் மூலம் நீதிமான்களுக்கு**; கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியின் பிரமாணம் வெளிப்பட்டு: **அவைகளின் நன்மை தீமைகள் மூலம்**, தேவ **நீதியின் கிரியைகள் செய்கிறவர்களுக்கு நித்திய ஜீவனை ஆளுகை செய்யும் வல்லமைகள் கணக்கிடப்பட்டு, நியத்தீர்ப்புகள் கொடுக்கப்பட்டது.**

Gal 3:15-20;Heb 2:13-20, Heb 9:16-24, Heb 10:19-25; Heb 6:13-20,

**3-3 ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி கிறிஸ்து வருகிறபோது, இரண்டு மாறாத விசேஷங்களினால், நேரடியாக வெளிப்படுத்துகிறார்;-**

**ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி கிறிஸ்து வருகிறபோது, ஆபிரகாமின் சந்ததிகள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளுகிறதற்காக; கிறிஸ்து, மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை கடந்து வந்து: இரண்டு மாறாத விசேஷங்களினால், நேரடியாக வெளிப்படுத்துகிறார்;-**

**ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தைப்பெற்ற கிறிஸ்துவின் சந்ததிகள் / 1,44,000 வரிசையில் வருகிறவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொள்ளுகிறதற்காக, நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை கடந்து வந்து:**

**தேவனிடத்தில் அடைக்கலமாக ஓடிவருகிறவர்களுக்கு மாதியாக, இரண்டு மாறாத விசேஷங்களினால், அவைகளை சுதந்தரித்துக் கொண்டு, பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்.**

Joh 3:13; Heb 2:13-20, Joh 6:33, Joh 6:38, Joh 6:51, Joh 6:62, Joh 8:42,

Joh 13:3-10, Joh 16:28-30, Joh 17:5;Eph 4:7-13,Eph 4:14-16; Joh 17:1-5, Joh 17:6-10, Joh 17:11-15, Joh 17:16-20, Joh 17:21-26, Heb 9:16-20,Heb 9:21-24,

3-4 ஆபிரகாமின் சந்ததிகள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளுகிறதற்காக; கிறிஸ்து, மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை கடந்து வந்து: நேரடியாக வெளிப்படுத்தின நிலையானதும் உறுதியானதுமான இரண்டு மாறாத விசேஷங்கள்;-

1 சாவுக்கேதுவாகிய ஆவி,ஆத்துமா,சரீரம் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, சாவாமையை தரித்துக் கொள்ளுகிறவர்கள். முதலாம் உயிர்தெழுதலில் பங்கடைந்து தேவனுடைய சாயலையும் ரூபத்தையும் சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்.

2 அழிவுள்ள மாயைகளின் அடிமைத்தனத்தினின்று ஆவி,ஆத்துமா,சரீரம், விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்.

3-5 கிறிஸ்து பாவத்தை ஆக்கினி தீர்ப்பு செய்யும் வழிமுறைகளின் மூலம் பரலோகத்தில் உள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளுக்கு / சத்தியத்திற்கு மாறக்கூடியவைகளாக இருக்கிற தேவனுடைய ஆசரிப்பு முறைகளையும், தேவனுடைய ஆராதனை முறைகளையும் பின்பற்றி, தங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறதினால் தேவனுக்கு புத்தியுள்ள ஆராதனை செய்கிறார்கள்;

இப்படி இவர்கள் சாவுக்கேதுவாகிய ஆவி,ஆத்துமா,சரீரம் பாதாளத்தின் வல்லமையாகிய முதலாம் மரணத்தை ஜெயங்கொள்ளுகிற சாவாமையை தரித்துக்கொள்ளுகிறபோது, முதலாம் மரணமும், இரண்டாம் மரணமும், ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறுகிறது,

மேலும் சாவுக்கேதுவாகிய ஆவி,ஆத்துமா,சரீரம் பாதாளத்தின் வல்லமையாகிய முதலாம் மரணத்தை ஜெயங்கொள்ளுகிறதினால் , முதலாம் உயிர்தெழுதலில் பங்கடைந்து தேவனுடைய சாயலையும் ரூபத்தையும் சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்.

3-6 இயேசு கிறிஸ்து என்னும் நாமத்தில் ஜனங்களுக்கு நேரடியாக வார்த்தையின் மூலம் வெளிப்பட்டு, பரலோகராஜ்யத்தின் உவமைகளின் இரசியங்கள் மூலமாக, பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற உன்மையான நன்மைகளுக்குரிய நேரடியான பொருளாகிய சத்தியங்களின் மூலம்:

பரலோகராஜ்யத்தின் இரசியங்களாகிய தேவனுடைய சத்தியமான வசனங்களை தங்கள் இருதயத்தில் விருந்தாக புசித்தவர்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள்,

இவர்கள் அழிவுள்ளதாகிய மாயைக்குக் கீழ்ப்பட்டிருந்து, இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, தங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுகிறார்கள்;

இவர்கள் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், தனக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய், தனக்குத் தேவன் பகிர்ந்து கொடுத்த ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணத்தின்படி: தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி அழியாமையை தரித்துக்கொள்ளுகிறபோது, அழிவுள்ளதாகிய மாயை ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறுகிறது.

2Co 5:1-5,2Co 5:6-10,1Co 15:50-58,Rom 12:1-6;;Rom 8:1-8, Rom 8:9-15, Rom 8:16-22, Rom 8:23-29; Gal 3:15-20;Heb 2:13-20, Heb 9:16-24, Heb 10:19-25; Heb 6:13-20, 1Pe 1:21-25

தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

தலைப்பு இருபத்தைந்து

**தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள்**

பொருளடக்கம் -2

இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தின் மூலம் **தேவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரமாணங்கள்**

1-0 தேவன் பேரில் வைக்கும் விசுவாசத்தின் சுவிசேஷம் இயேசு கிறிஸ்துவின் மூலம் அறிவிக்கப்படுதல்

2-0 இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள்

3-0 இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் கிரியைகள்.

1-0 தேவன் பேரில் வைக்கும் கிறிஸ்துவின் விசுவாசத்தின் சுவிசேஷம் இயேசு கிறிஸ்துவின் மூலம் அறிவிக்கப்படுதல்

1-1 இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் ஆரம்பம் Isa_40:3-8, Mat_3:3, Mar_1:1-3, Luk_3:4-6, Joh_1:23,

1-2 எலியாவின் இரண்டு மடங்கு ஆவியின் பெலத்தோடு விசுவாசத்தின் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. Mal_3:12, Mal_4:5-6, Mat_11:10-20, Mat_17:13-13, Mar_9:11-13, Luk_1:13-17,

1-3 விசுவாசத்தின் சுவிசேஷம் எங்கே? அறிவிக்கப்படுகிறது. Jer_6:16-19, Jer_18:15, Mic_3:9-10,

1-4 விசுவாசத்தின் அஸ்திபாரம் நிர்மூலமாகும்போது நீதிமான் என்ன செய்வான்? Psa_11:3, Pro_25:26, Ecc_10:15, Mat_12:20,

1-5 விசுவாசத்தின் சுவிசேஷம் யார்? மூலம் யாருக்கு அறிவிக்கப்படுகிறது? 1Pe_1:5-6, Psa_37:39, Psa_118:15, 1Pe_4:18, Psa_107:1-9, 1Pe_1:12

1-6 உன்னுடைய ஆத்துமாவிற்கு நீயே உத்தரவாதி Eze_3:17-21 , Eze_18:20, Eze_33:18-19, Gal_5:16-17, Rom_8:8-10, 2Pe_2:19-22,

1-7 உன் ஆத்துமாவே, உன்னுடைய சகோதரன் Mat_5:21-26, Mat_7:12, Psa_49:6-9, Psa_89:48, Isa_9:19-20, 1Th_4:6, Job_6:24-27, Gen_9:5-6, Hag_2:22, 1Jo_2:9-11, 1Jo_4:20-21, Gen_4:8-10, 1Jo_3:9-16, Joh_15:12-13,

1-8 ஒருவனுடைய சுயத்தை அவனே மேற்கொள்ள வேண்டும் Est_1:20-22, Jam_3:1-18, Ecc_10:11-14, 2Ti_2:15-26, 1Co_9:20-27,

2-0 இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள் **Rom_1:16, Rom_12:6, Hab_2:1-4,**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தையை தங்கள் வாயினால் அறிக்கை செய்து, தேவனுடன் உடன்படிக்கை செய்து கொண்ட யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் பிரமாணங்கள். Mat_24:14, Mar_13:10, Joh_1:12, Gal_3:26, Exo_19:5, Joh_10:1-13,Rom_4:5, Joh_9:31,

2-1 நான் என் காவலிலே தரித்து :- என் இருதயத்தில் எல்லா காவலுடன் நான் இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் காத்துக் கொண்டு. Pro_4:23, 1Co_16:13, Col_1:22-23,

2-2 அரணிலே நிலை கொண்டிருந்து :- தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவுப் பிரமாணத்தில் நிலை கொண்டிருந்து....

,2Co_10:14; Mat_25:15; Rom_12:3-6, Rom_15:20; 1Co_12:11-12; Eph_4:7-13; 1Pe_4:10-11, 1Co_4:6-7, 1Co_12:4-11, 1Co_12:28-31, Hab_2:1-4,

2-3 அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும்:- தேவன் தம்முடைய அழைப்பின் எந்த சித்தத்தை செய்ய சொல்லுவா ரென்றும் கவனித்துப் பார்ப்பேன். Rom_12:2-6, Eph_1:10, Eph_5:17, Col_4:12, Act_9:6, Phi_2:13,

2-4 தேவன் என்னை கண்டிக்கும்போது நான் என்ன உத்தரவு சொல்லுவேனென்றும், கவனித்துப் பார்ப்பேன்;-

தேவன் என்னை கண்டிக்கும் போது நான் கடிந்து கொள்ளு தலை அலட்சியம் செய்யமாட்டேன்,என்னை சீர்திருத்தும்படி கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளுவேன். Psa_141:5, Pro_13:8, Pro_15:5, Pro_15:31-32, Pro_21:20, Pro_29:15, Tit_1:14, 2Ti_3:15-17,

2-5 தரிசனத்தை எழுதி :- தேவனுடைய கற்பனைகளை என் இருதயத்தில் எழுதி. Hab_2:2, Deu_6:4-9, Psa_37:31, Pro_3:1-9, Rom_2:14-15, Rom_2:27,

2-6 குறித்த காலத்திற்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டி ருக்கிறது:- கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் தொடர்புடைய கடைசி காலத்திற்குத் தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது. Dan 7:21,Dan 8:17, Dan 12:9, Rev 1:3, Rev 10:6, Rev 11:18, Job 24:1, Mat 16:3, Luk 12:56, Ecc 8:5-6,

2-7 முடிவிலே அது விளங்கும் அது பொய் சொல்லாது:- தீர்க்கத்தரிசன நிறைவேறுதல்களில் அது விளங்கும். 1Co 3:13, 2Co 11:15, Mat 24:13

2-8 அது தாமத்தாலும் அதற்கு காத்திரு:- அது நிச்சயமாகவே வரும் அது தாமதிப்பதில்லை. Pro_23:18, Gen_49:18, Isa_40:18, Isa_49:18, Isa_49:23, Isa_64:4, Psa_42:11, Psa_43:5,

3-0 இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் கிரியைகள்

3-1 இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் ஆரம்பம் :- அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் கிறிஸ்து இயேசுவின் விசுவாசத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு. Joh_1:12, Gal_3:26, Rom_4:1-10, Joh_9:31, Joh_10:1-13, Rom_3:24-28,Tit_3:5, Eph_5:26, Eph_2:8-9, Gal_3:2-7, Gal_5:4-6, Rom_11:6,

3-2 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தால் நீதிமான் ஆவியின் கிரியைகளில் பிழைப்பான் :-

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தினால் மாம்சத்தின் கிரியைகளை அழித்தால்; விசுவாசத்தில் ஆவியின் கிரியைகளில் பிழைப்பான். Rom 1:17, Rom 8:1-4, Rom 8:5-11, Heb 10:36-39,

3-3 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் ஆவியில் பின்வாங்கி போகுதல் :-

கிறிஸ்து இயேசுவின் விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு, மாம்ச இச்சையின் கிரியைகளை ஆவியில் ஜெயங்கொள்ள முடியாதவர்கள், மாம்ச இச்சைக்கு மீண்டும் அடிமைப்பட்டவர்கள். Rom_8:5-6, Rom_8:13, Pro_14:14, Luk_8:13, 1Ti_6:9-12, Joh_6:51-66,

3-4 இயேசு கிறிஸ்துவின் மூலம் பரிசுத்த ஆவியின் கிரியைகளின் வகைகள்:- தேவன் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார். Rom_9:2, Rom_12:2-6, 1Co_12:12 1Co_12:13-27, 1Co_15:38, 1Ti_2:20-21, Eph_4:1-13, Eph_4:13-25, Eph_2:17-22, Col_2:18-22, Phi_2:13, Act_9:6, 1Pe_4:10,

3-5 ஊழியர் அழைப்பின் அளவுப் பிரமாணம் 2Co_10:12-18,Rom_12:2-6, Eph_4:7, Eph_4:13, Eph_4:16,

3-6 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தில் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணுதல்:- Hab_2:4-6,Eze_36:5, Mal_3:13-18, Mal_4:1-6, 2Ti_2:9, Isa_65:5, Isa_66:17, Psa_83:12, Deu_19:14, Deu_27:17, Amo_6:6-7, Amo_6:13, Hos_8:4, Luk_14:7-11,

3-7 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தினால் ஆவியின் கிரியைகள் இல்லாதவர்கள்:-

கர்த்தராகிய இயேசுவை அறிக்கை செய்து, விசுவாசத்தை ஏற்றுக்கொண்டவர்கள்; கிறிஸ்துவின் ஆவியின் கிரியைகள் இல்லாதபடியால் ஆவியில் செத்தவர்கள். Jam_2:14-16, Jam_3:17-18, Mar_16:16, Joh_3:18, Joh_3:36, Joh_6:64, Jud_1:5, Tit_3:8, 1Jo_2:3-6, 1Jo_5:10, Rev_20:12,

3-8-0 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு :-

இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு கிருபையினால் வெளிப்படாமல் கிரியைகளின் மூலம் வெளிப் படுத்தப்படுகிறது. Heb_12:2, Exo_19:5, 2Th_2:3-8, 2Ti_2:12, Rev_1:8, Rev_21:6, Rev_22:13,

3-8-1 கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் இயேசு கிறிஸ்துவின் விசுவாச துரோகிகளின் மேல் தேவன் நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார். .Zec_11:5, Zec_11:8-10,2Ti_2:12, Mal_2:1-10, Pro_2:16-17,

3-8-2 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை தங்கள் வாழ்க்கையின் முடிவு வரை காத்திருந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் பாதியிலே உடன்படிக்கையை முறித்தபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு. Mat_10:22 Mat_24:13, Mar_13:13, Rev_2:26,

3-8-3 சத்தியத்தின் மேல் உள்ள அன்பை அங்கீகரித்து தங்களுடைய விசுவாச உடன்படிக்கையையும் ஆவிக்குரிய வாழ்க்கையும் காத்துக்கொள்ளாமல் போனபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு . .2Th_2:9-10, Dan_8:11-12,

3-8-4 அக்கிரமத்தின் மிகுதியினால் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகருடைய அன்பு தணிந்து விசுவாசத்தை இழந்து போனபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு Mat_24:12,

3-8-5 இயேசு கிறிஸ்துவின் மூலம் விசுவாச உடன்படிக்கை செய்த நாளில் மரணமடைந்த கேட்டின் மகனாகிய பாவ மனிதன்; மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு பாவ கிரியைகளின் மூலம் வெளிப்படும்போது அவனுடைய விசுவாச உடன்படிக்கை அவனால் முறிக்கப்படுகிறது. . Rom_6:2-11, Rom_8:9-14, Col_2:11-12, 2Th_2:3, Eph_4:22-24,

3-8-6 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை நிலை நிறுத்துகிற பரிசுத்த ஆவி தேவனால் நீக்கப்படும்போது; தேவன் அந்த ஜனங்களுடன் செய்த உடன்படிக்கையை முறித்துப் போடுகிறார். Zec_11:5, Zec_11:8-10,2Ti_2:12,

3-8-7 தேவனுடைய வசனத்தின் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு இரட்சிப்படைய விரும்பாதபடியால் பொய்யை விசுவாசிக்கும்படி பரிசுத்த ஆவிக்கு பதிலாக வஞ்சக ஆவியை தேவன் அவர்களுக்குள்ளே நியாயத்தீர்ப்பாக அனுப்புகிறார். 2Th_2:11-12, 1Sa_16:14, 1Sa_16:16, 1Sa_16:23,

3-8-8 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை முறித்த விசுவாச துரோகிகள், கள்ள தீர்க்கதரிசிகள், கள்ள அப்போஸ்தலர்கள், அந்திக்கிறிஸ்துக்கள் ஆகியவர்களிடம் வெளிப்படுகிற வஞ்சிக்கிற ஆவிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

உங்களது ஆவிக்குரிய மனிதன் உங்கள் மூலம் வஞ்சிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருங்கள் Psa_49:20 , Pro_19:2-3, Hos_4:6, Isa_5:13, Isa_55:1-2, 1Co_3:18, Gal_6:3-4, Col_2:4, Col_2:18-19, 1Th_4:4-8, Heb_3:12-14, Eph_4:14-16, Pro_23:29-33, Eze_33:13,

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

## தலைப்பு இருபத்தைந்து

### தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள்

பொருளடக்கம் -3

**உப்பின் குணாதிசயங்களோடு தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள் ஒப்பிடப்படுகிறது**:-

1-0 **பூமிக்கு உப்பாயிருக்கிறவர்களின் மூலம் தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்களுடைய உப்பின் சாரத்தை / குணாதிசயங்களை /சுவைகளை வெளிப்படுத்துகிறவர்களுடைய கிரியைகளும் பிரதிபலன்களும்**

2-0 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற மூலைக்கலாகிய** கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களுடைய **திட** அஸ்திபாரத்தின்மேல் விலையேறப்பெற்ற கல், பொன், வெள்ளி, மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணுகிறது;- .

3-0 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற மூலைக்கலாகிய கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களுடைய திட அஸ்திபாரத்தின் மேல் கட்டினவர்களுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று ஸ்நானங்களுக்கடுத்த பிரமாணத்தினால் பரிசோதிக்கப்படுகிறது**:-

1-0 **பூமிக்கு உப்பாயிருக்கிறவர்களின் மூலம் தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்களுடைய உப்பின் சாரத்தை / குணாதிசயங்களை /சுவைகளை வெளிப்படுத்துகிறவர்களுடைய கிரியைகளும் பிரதிபலன்களும்**

1-1 **ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்**; **பரலோகராஜ்யம் அவர்களுடையது**. Mat 5:3

1-2 **துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்**; **அவர்கள் ஆறுதலடைவார்கள்**. Mat 5:4

1-3 **சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்**; **அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்**. Mat 5:5

1-4 **நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்**; **அவர்கள் திருப்தியடைவார்கள்**. Mat 5:6

1-5 **இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்**; **அவர்கள் இரக்கம் பெறுவார்கள்**. Mat 5:7

1-6 **இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்**; **அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்**. Mat 5:8

1-7 **சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்**; **அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்**. Mat 5:9

1-8 **நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்**; **பரலோகராஜ்யம் அவர்களுடையது**. Mat 5:10

1-9 **என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி**, **பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்**; Mat 5:11

1-10 **சந்தோஷப்பட்டு**, **களிகூருங்கள்**; **பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்**; **உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே**. **Mat 5:12**

1-11 **உப்பு நல்லதுதான்**, **உப்பு சாரமற்றுப்போனால்**, **அதற்கு எதினாலே சாரமுண்டாக்குவீர்கள்**? **உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள்**, **ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயும் இருங்கள்** Mar 9:50

1-12 **புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து**, **காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்**. **அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு**, **உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக**. Col 4:5-6

1-13 **நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்**; **உப்பானது சாரமற்றுப்போனால்**, **எதினால் சாரமாக்கப்படும்**? **வெளியே கொட்டப்படுவதற்கும்**, **மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது**. Mat 5:13

1-14 **நீ படைக்கிற எந்த போஜனபலியும் உப்பினால் சாரமாக்கப்படுவதாக**; **உன் தேவனுடைய உடன்படிக்கையின் உப்பை உன் போஜனபலியிலே குறையவிடாமல்**, **நீ படைப்பது எல்லாவற்றோடும் உப்பையும் படைப்பாயாக**. **எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படுவதுபோல**, **எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுவான்**. Lev 2:13; Mar 9:49 ,

1-15 **நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்**; **மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது**. **விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல்**, **விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்**; **அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்**. **இவ்விதமாய்**, **மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு**, **பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி**, **உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது**. Mat 5:14-16

2-0 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற மூலைக்கலாகிய** கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களுடைய **திட** அஸ்திபாரத்தின்மேல் விலையேறப்பெற்ற கல், பொன், வெள்ளி, மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணுகிறது;- .

2-1 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மூலைக்கல்**

2-2 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற மூலைக்கலாகிய** கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களுடைய **திட அஸ்திபாரம்**

2-3 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற விலையேறப்பெற்ற கல்**

2-4 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற பொன்**,

2-5 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற வெள்ளி**

2-6 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற மரம்**,

2-7 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற புல்**,

2-8 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற வைக்கோல்**

2-1 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மூலைக்கல்**/ கிறிஸ்து:-

**அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து**: **வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே**, **மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற**

**வேதவாக்கியத்தின் கருத்தென்ன**? **அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப்போவான்**, **அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்றார்**. Luk 20:17-18

**ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது**: **இதோ**, **அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்**; **அது பரீட்சிக்கப்பட்டதும்**, **விலையேறப்பெற்றதும்**, **திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்**, **விசுவாசிக்கிறவன் பதறான்**. Isa 28:16

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை. .Joh 1:1-5

Isa_28:16; Pro_8:22-32 ; Joh_1:1-8,Joh_1:9-14, Joh_1:18, Joh_6:46;Joh_16:28,Joh_17:3; Rom_3:29-30, Rom_10:12; 1Co_8:6; Gal_3:20; Eph_4:6,Psa_2:1-6, Psa_2:7-12, Gen_1:1-4, Gen_1:26-28; Psa_33:6, Heb_11:3; 2Pe_3:5-6, Psa_102:25-26; Isa_45:12, Isa_45:18; Col_1:12-16;Col_1:17-21; Heb_1:1-6,Heb_1:7-14, Heb_3:1-4;Heb_11:27; Rev_4:11,Job_38:1-11; Job_38:12-22, Job_38:23-32, Job_38:33-41, Psa_104:1-10;Psa_104:11-20; Psa_104:21-30;Psa_104:31-35; Isa_40:1-8,Isa_40:9-15,Pro_30:4,

2-2 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற மூலைக்கலாகிய** கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களுடைய **திட அஸ்திபாரம்**;-

1 செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல்,

2 தேவன்பேரில் வைக்கும் விசுவாசம்,

3 ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்,

4 கைகளை வைக்குதல்,

5 மரித்தோரின் உயிர்த்தெழுதல்,

6 நித்திய நியாயத்தீர்ப்பு

7 பூரணராகும்படி கடந்து போவதற்கு நீதியின் வசனங்கள்

ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக. Heb 6:1-2

காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிற படியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்.

பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களை யுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். Heb 5:12-14

2-3 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற விலையேறப்பெற்ற கல்லின் பொருள்** ஞானம் / ஆண்டவருக்குப் பயப்படுகிற தினாலும், பொல்லாப்பை விட்டு விலகுகிறதினாலும், பெற்றுக்கொள்ளுகிற ஞானத்தின் மூலம் வெளிப்படுகிற நீதியின் கிரியைகள்; **விலையேறப்பெற்ற கல்லின் விலையைவிட உயர்ந்தது**:-

**ஆனாலும் ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே**? **புத்தி விளைகிற இடம் எது**? **அதின் விலை மனுஷனுக்குத் தெரியாது**; **அது ஜீவனுள்ளோருடைய தேசத்திலே அகப்படுகிறதில்லை**. **ஆழமானது**: **அது என்னிடத்தில் இல்லையென்கிறது**; **சமுத்திரமானதும்**, **அது என்னிடத்தில் இல்லையென்கிறது**. **அதற்கு ஈடாகத் தங்கத்தைக் கொடுக்கவும்**, **அதற்குக் கிரயமாக வெள்ளியை நிறுக்கவும் கூடாது**. Job 28:12-15

**ஓப்பீரின் தங்கமும்**, **விலையேறப்பெற்ற கோமேதகமும்**, **இந்திர நீலக்கல்லும் அதற்கு ஈடல்ல**. **பொன்னும் பளிங்கும் அதற்கு ஒப்பல்ல**;

**பசும்பொன்னாபரணங்களுக்கு அதை மாற்றக்கூடாது**. **பவளத்தையும் ஸ்படிகத்தையும் அத்தோடே ஒப்பிட்டுப் பேசலாகாது**; **முத்துகளைப்பார்க்கிலும் ஞானத்தின் விலை உயர்ந்தது**. **எத்தியோப்பியாவின் புஷ்பராகம் அதற்கு நிகரல்ல**; **பசும்பொன்னும் அதற்குச் சரியல்ல**. Job 28:16-19

**இப்படியிருக்க**, **ஞானம் எங்கேயிருந்து வரும்**; **புத்தி தங்கும் இடம் எங்கே**? **அது ஜீவனுள்ள சகலருடைய கண்களுக்கும் ஒளித்தும்**, **ஆகாசத்துப் பறவைகளுக்கு மறைந்தும் இருக்கிறது**. **நாசமும் மரணமும்**, **நாங்கள் எங்கள் காதுகளினாலேமாத்திரம் அதின் கீர்த்தியைக் கேட்டோம் என்கிறது**. **தேவனோ அதின் வழியை அறிவார்**, **அதின் ஸ்தானம் அவருக்கே தெரியும்**. Job 28:20-23

**அவர் பூமியின் கடையாந்தரங்களைப் பார்த்து**, **வானங்களின்கீழ் இருக்கிறதையெல்லாம் காண்கிறார்**. **அவர் காற்றுக்கு அதின் நிறையை நியமித்து**, **ஜலத்துக்கு அதின் அளவைப் பிரமாணித்து**, Job 28:24-25

**மழைக்குத் திட்டத்தையும்**, **இடிமுழக்கத்தோடே கூடிய மின்னலுக்கு வழியையும் ஏற்படுத்துகிறார்**. **அவர் அதைப் பார்த்துக் கணக்கிட்டார்**; **அதை ஆராய்ந்து ஆயத்தப்படுத்தி**, **மனுஷனை நோக்கி**: **இதோ**, **ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்**; **பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்றார் என்று சொன்னான்**. Job 28:26-28

2-4 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற பொன்னின் பொருள்** புத்தி / ஆண்டவருக்குப் பயப்படுகிறதினாலும், பொல்லாப்பை விட்டு விலகுகிறதினாலும், பெற்றுக்கொள்ளுகிற புத்தியின் மூலம் வெளிப்படுகிற நீதியின் கிரியைகள்; **பொன்னின் விலையைவிட உயர்ந்தது**:-

பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம்! வெள்ளியைச் சம்பாதிப்பதிலும் புத்தியைச் சம்பாதிப்பது எவ்வளவு மேன்மை! தீமையை விட்டு விலகுவதே செம்மையானவர்களுக்குச் சமனான பாதை; தன் நடையைக் கவனித்திருக்கிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்.

அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. அகங்காரிகளோடே கொள்ளைப் பொருளைப் பங்கிடுவதைப்பார்க்கிலும், சிறுமையானவர்களோடே மனத்தாழ்மையாயிருப்பது நலம். Pro 16:16-19

2-5 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற வெள்ளியின் பொருள்** அறிவு / ஆண்டவருக்குப் பயப்படுகிறதினாலும், பொல்லாப்பை விட்டு விலகுகிறதினாலும், பெற்றுக்கொள்ளுகிற அறிவின் மூலம் வெளிப்படுகிற நீதியின் கிரியைகள்; **வெள்ளியின் விலையைவிட உயர்ந்தது**:-

நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள்; நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்துகொள்ளுதலை வெறுத்தீர்கள். ஆகையால், நானும் உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படுங்காரியம் வரும்போது ஆகடியம்பண்ணுவேன். Pro 1:24-26

நீங்கள் பயப்படுங்காரியம் புசல்போல் வரும்போதும், ஆபத்து சூறாவளிபோல் உங்களுக்கு நேரிடும்போதும், நெருக்கமும் இடுக்கணும் உங்கள்மேல் வரும்போதும், ஆகடியம்பண்ணுவேன். அப்பொழுது அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் மறுஉத்தரவு கொடுக்கமாட்டேன்; அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், என்னைக் காணமாட்டார்கள். Pro 1:27-28

அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்து கொள்ளாமற்போனார்கள். என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை; என் கடிந்துகொள்ளுதலையெல்லாம் அசட்டை பண்ணினார்கள். ஆகையால் அவர்கள் தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள்; தங்கள் யோசனைகளினால் திருப்தியடைவார்கள். Pro 1:29-31

பேதைகளின் மாறுபாடு அவர்களைக் கொல்லும், மூடரின் நிர்விசாரம் அவர்களை அழிக்கும். எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான். Pro 1:32-33

2-6 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற மரத்தின் பொருள் / தேவனுடைய தரிசனங்களை ஓரளவு உணர்ந்து கொண்டவர்கள் அல்லது** தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருந்து கிட்டப் பார்வை உள்ளவர்கள்:-

பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார்; அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவனைத் தொடும்படி அவரை

வேண்டிக்கொண்டார்கள். அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக்கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்மேல் கைகளை வைத்து: எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். Mar 8:22-23

அவன் ஏறிட்டுப் பார்த்து: நடக்கிற மனுஷரை மரங்களைப்போலக் காண்கிறேன் என்றான். பின்பு அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்து, அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார்; அப்பொழுது அவன் சொஸ்தமடைந்து, யாவரையும் தெளிவாய்க் கண்டான். பின்பு அவர் அவனை நோக்கி: நீ கிராமத்தில் பிரவேசியாமலும், கிராமத்தில் இதை ஒருவருக்கும் சொல்லாமலும் இரு என்று சொல்லி, அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார். Mar 8:24 -26

இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 2Pe 1:4

இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். 2Pe 1:5-7

இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான். 2Pe 1:8-9

ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும். 2Pe 1:10-11

2-7 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற புல்லின்**, **பொருள்** / **மனிதனின்** மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவைகளின் கிரியைகள் :-

பின்னும் கூப்பிட்டுச் சொல் என்று ஒரு சத்தம் உண்டாயிற்று; என்னத்தைக் கூப்பிட்டுச் சொல்வேன் என்றேன். அதற்கு: மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப்போலவும் இருக்கிறது.

கர்த்தரின் ஆவி அதின்மேல் ஊதும்போது, புல் உலர்ந்து, பூ உதிரும்; ஜனமே புல். புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல் என்று உரைத்தது. Isa 40:6-8

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல,

அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். 1Jn 2:15-17

2-8 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற திட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற** வைக்கோலின் **பொருள்** / மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனைகளுடைய மாயைகளினால் வெளிப்படுகிற கிரியைகள்:-

சேனைகளின் கர்த்தர் நியாயத்தீர்ப்பினால் உயர்ந்து, பரிசுத்தமுள்ள தேவன் நீதியினால் பரிசுத்தராய் விளங்குவார். அப்பொழுது ஆட்டுக்குட்டிகள் கண்டவிடமெல்லாம் மேயும்; கொழுத்தவர்களுடையதாயிருந்து பாழாய்ப்போன நிலங்களைப் பரதேசிகள் அநுபவிப்பார்கள். Isa 5:16-17

மாயையின் கயிறுகளால் அக்கிரமத்தையும், வண்டியின் வடங்களால் பாவத்தையும் இழுத்துக்கொண்டு வந்து, நாம் பார்க்கும்படி அவர் தீவிரித்துத் தமது கிரியையைச் சீக்கிரமாய் நடப்பிக்கட்டுமென்றும், இஸ்ரவேலின் பரிசுத்தருடைய ஆலோசனையை நாம் அறியும்படி அது சமீபித்து வரட்டுமென்றும் சொல்லுகிறவர்களுக்கு ஐயோ! Isa 5:18-19

தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ! தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ! Isa 5:20-21

சாராயத்தைக் குடிக்க வீரரும், மதுவைக் கலந்துவைக்கப் பராக்கிரமசாலிகளுமாயிருந்து, பரிதானத்திற்காகக் குற்றவாளியை நீதிமானாகத் தீர்த்து, நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய்ப் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ! Isa 5:22 -23

இதினிமித்தம் அக்கினிஜுவாலை வைக்கோலைப் பட்சிப்பதுபோலவும், செத்தையானது நெருப்புக்கு இரையாகி எரிந்துபோவதுபோலவும், அவர்கள் வேர் வாடி, அவர்கள் துளிர் தூசியைப்போல் பறந்துபோகும்; அவர்கள் சேனைகளின் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, இஸ்ரவேலிலுள்ள பரிசுத்தருடைய வசனத்தை அசட்டைபண்ணினார்களே. Isa 5:24

3-0 **சீயோனிலே வைக்கப்பட்டிருக்கிற மூலைக்கலாகிய கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களுடைய திட அஸ்திபாரத்தின் மேல் கட்டினவர்களுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று ஸ்நானங்களுக்கடுத்த பிரமாணத்தினால் பரிசோதிக்கப்படுகிறது**:-

3-1. சமுத்திர ஜலத்தினால் ஞானஸ்தானம்
3-2. யோர்தான் தண்ணீரினால் ஞானஸ்தானம்
3-3. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்தானம்
3-4. தேவனுடைய அக்கினியினால் ஞானஸ்தானம்
3-5. பாதாள அக்கினியில் அனலினால் ஞானஸ்தானம்
3-6. பின்மாரி மழையின் ஜலத்தினால் ஞானஸ்தானம்
3-7. அக்கினி கலந்த கண்ணாடிக்கடலின் ஜலத்தினால் ஞானஸ்தானம்
3-8. அக்கினியும் கந்தகமும் கலந்த நித்திய நரகத்தில் ஞானஸ்தானம்

3-1. சமுத்திர ஜலத்தினால் ஞானஸ்தானம்:-

பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட் ஜனங்கள் தேவ அறிவினாலும் மகிமையினாலும் ஞானஸ்தானம் பெற்று தங்கள் ஞானத்தை சுத்திகரித்துக் கொள்ளுதல் / தேவ ஜனங்கள் தேவ அறிவையும், மகிமையும் பெற்று அதில் திரளான காலங்களின் அளவுகள் நிறைந்திருக்கும்போது, அதை தங்கள் ஆத்துமாவின் தாகத்திற்கேற்றப்படி நடை முறைபடுத்த முடியாது. ஆனால் அவர்கள் அவைகளின் அறிவை அறிந்து கொண்டு அதன் வழியாக கடந்து செல்ல முடியும். 1Co_10:1-2, Psa_136:13-15, Psa_78:13, Psa_33:7, Exo_14:21-22, Neh_9:11, Isa_11:9, Hab_2:14, Isa_6:3, Num_14:21, Psa_107:23-30, Rom_2:14-15, Rom_2:27, Isa_5:13, Hos_4:6, Jud_1:13, Isa_57:20, Pro_15:7,

3-2. யோர்தான் தண்ணீரினால் ஞானஸ்தானம் :-

பாவத்திலிருந்து மனம் திரும்பியவர்கள் நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஞானஸ்தானம் பெற்று தங்கள் ஞானத்தை சுத்திகரித்துக்கொள்ளுதல் / தேவனுடைய இராஜ்ஜியம் இதோ இங்கே இருக்கிறது, அதோ அங்கே இருக்கிறது என்று நம்பி, யாரையும் பின்பற்ற வேண்டாம் அல்லது எந்த இடத்திற்கும் ஓட வேண்டாம்,

நீங்கள் நித்திய ஜீவ வார்த்தைகளால் ஞானஸ்தானம் பெற்றுக்கொள்ளும்போது நீங்கள் இருக்கிற இடத்திலிருந்தே தேவனுடைய இராஜ்ஜியத்தை உங்கள் ஆவிக்குரிய கண்களால் வெகுதூரத்திலிருந்து உங்களால் பார்க்க முடியும். Mar_9:1, Luk_9:24-27Joh_3:3, Luk_17:20-23Tit_3:5, 1Pe_1:231Pe_3:21,

நித்திய ஜீவ வார்த்தைகள் நித்திய காலமாக இருப்பதால் அவைகளுக்கு குறிப்பிட்ட கால அளவுகள் வரையறுக்கப்படவில்லை, ஆனால் ஒருவர் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் ஞானஸ்தானம் பெற்று அவைகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும்போது, நித்திய ஜீவ வார்த்தைகளின் கால அளவுகளை அவனுடைய கிரியைகளின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு;

தேவனுடைய வார்த்தைகளை நிறைவேறுவதற்கு தேவையான கால அளவுகளை எடுத்துக்கொள்ளுகிறது./ உடன்படிக்கை செய்து கொண்டவரின் கிரியைகள் மூலம் நித்திய ஜீவ வார்த்தைகளின் சுவையும் வெளிப்படுகிறது. Mat_16:15-19, Joh_6:65-69, Joh_1:1-5, Isa_51:1, 1Ki_5:17, 1Ki_6:7, 1Pe_1:4, 1Pe_1:23, 1Jo_1:1-4, Act_5:19-20,Pro_5:3-7, Jer_2:13, Phi_2:14-16, Jer_23:28-29,

3-3. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்தானம் :-

கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் பரிசுத்த ஆவியின் சத்திய வார்த்தைகளினால் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்று தங்கள் ஞானத்தை சுத்திகரித்துக் கொள்ளுதல் /பரிசுத்த ஆவியுடன் உடன்படிக்கை செய்து பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளும்போது; பரிசுத்த ஆவியின் சத்திய வார்த்தைகளால் ஒருவன் மறுபடியும்

பிறந்து அவன் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு உள்ளே பிரவேசிக்கிறான், அல்லது அவனுக்குள்ளே தேவனுடைய இராஜ்ஜியம் இருக்கிறது.

Mat_16:24-28, Joh_3:5, Mat_12:28, Luk_11:20, Jam_1:17-18, Tit_3:5, .Mat_3:11, Luk_3:16, Mar_1:8, Joh_1:31-34 , Act_1:4-5, Joh_14:16-18, Joh_14:26, Joh_15:26-27, Joh_16:7-14, Joh_17:17-23 Exo_13:21-22 , Exo_14:19-201Co_10:1-2, Neh_9:12, Neh_9:19-20, Psa_105:39, Psa_78:14, Exo_24:15-18, Exo_40:38, Deu_1:33 , Isa_4:2-6, Psa_143:10, Job_32:8, Pro_20:27,

3-4. தேவனுடைய அக்கினியினால் ஞானஸ்தானம் :-

பரிசுத்தவான்கள் தேவனுடைய அபிஷேக ஆவியினால் ஞானஸ்தானம் பெற்று தங்கள் ஞானத்தை சுத்திகரித்துக் கொள்ளுதல் / தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக அபிஷேக ஆவியுடன் உடன்படிக்கை செய்து தேவனுடைய சித்தத்தின் திட்டம் நிறைவேற்றப்படுதல்.

**தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுகிறபோது; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்**:-

**தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படுவதுபோல, எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுகிறபோது; அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்**. Mar 9:49 1Co 3:13

**எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது**. 1Co 3:10-11

**ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்**. 1Co 3:12-13

**அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும். நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா**? 1Co 3:14-16

**ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம். ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன்**. 1Co 3:17-18

தேவனுடைய அபிஷேக ஆவியின் உடன்படிக்கைக்கு எதிராக செயல்படும் துன்மார்க்கர்கள் தேவ அக்கினியால் பட்சிக்கப்படுதல் Exo 13:21-22, Exo 14:24, Isa 10:16-17, Zec 2:5, Isa 4:2-6, Neh 9:12, Neh 9:19, Psa 104:4, Heb 1:7, Son 8:6, Isa 66:15-16, Oba 1:18, Joe 2:5, Exo 3:2, Act 7:30, Psa 29:7, Act 2:3,Deu 32:2, 2Sa 22:9, Psa 7:13, Psa 18:8, Psa 39:3, Jer 5:14, Jer 20:9, Lam 1:13, Zec 12:6, Mat 3:11, Luk 3:16,

3-5. பின்மாரி மழையின் ஜலத்தினால் ஞானஸ்தானம் :-

பின்மாரி மழையின் ஞானஸ்தானம் Zec 10:1, Deu 32:1-2, Lev 26:1-4, Deu 28:12, Deu 28:24, Isa 50:4, Job 23:25-34, Isa 30:8-13, Isa 30:27-28, Isa 8:5-10, Isa 57:20-21, Job 4:19, Job 29:21-23, Job 28:25-28, 2Ch 7:13-14, Isa 41:21-29,

பின்மாரி மழையின் தேவ வார்த்தைகளினால் ஞானஸ்தானம் பெற்றுக் கொள்ளும்போது மணல் மேல் போடப்பட்ட அஸ்திபாரத் தின் பெலம் பரிசோதிக்கப்பட்டு, அதன் வடிவம் தகர்க்கப்பட்டு, அதனுடைய கிரியைகள் வெளிப்படுத்தப்படும். Mat 7:24-27, Eze 13:10-16, Isa 28:14-19, Luk 6:48-49, Jer 17:5-13, Psa 69:28, Jer 23:25-34, Isa 30:8-13, Isa 30:27-28, Isa 8:5-10, Isa 57:20-21, Job 4:19, Job 22:16, Mic 1:6,

மணல் மேல் போடப்பட்ட அஸ்திபாரத்தின் கற்கள் கன்மலை யிலிருந்து எடுக்கப்பட்டவைகள் Job 39:13-18, Hab 1:6-11, Rev 20:8, Psa 5:10, Psa 33:10, Pro 12:5, Job 5:13, Rev 17:13, Psa 139:17-18, Psa 94:19, Job 12:14-25, Joh 21:25, Pro 8:26-29, Ecc 3:20,

3-6. பாதாள அக்கினியில் அனலினால் ஞானஸ்தானம் :-

கிறிஸ்துவாகிய கன்மலையின் மேல் போடப்பட்ட அஸ்தி பாரத்தின் பெலத்தை பரிசோதிக்கும்படி பாதாளத்தின் வல்லமையான மரண இருள் போன்ற கஷ்டங்கள், சோதனைகளால், ஞானஸ்தானம் பெற்று தங்கள் ஞானத்தின் கிரியைகளை வெளிப்படுதல் /

நித்திய ஜீவ வார்த்தைகள் இல்லாமல் பாதாள அக்கினியின் அனலில் அகப்படும்போது முதலாம் மரணம் நேரிடும் இதனால் தேவனுடைய ரூபமும், சாயலும் நஷ்டமடைந்து

அக்கினியும் கந்தகமும் கலந்த நித்திய நரகத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள். Mat_16:15-19, 1Co_3:10-17, Job_20:26, Psa_49:6-15, Job_14:20-22, 1Co_5:1-5, Son_8:6, Job_31:1-12, Deu_32:22-29, Hos_8:14, Hos_13:14-16, Psa_16:8-11, Act_2:25-28, Psa_18:7, Lam_4:11, Psa_11:3, Psa_80:5,

3-7. அக்கினி கலந்த கண்ணாடிக் கடலின் ஜலத்தினால் ஞானஸ்தானம்

முதலாம் மரணத்தை ஜெயங்கொண்டு முதலாம் உயிர்தெழு தலில் பங்கடைந்த பரிசுத்தவான்கள் ஒளியை வெளிப்படுத்தும் விலை மதிப்புள்ள கனிம பொருள்கள் பொடியாக்கப்பட்டு அதனுடன் அக்கினியும் கலந்த அடர்த்தியான ஜலத்தினால் ஞானஸ்தானம் பெற்று தாங்கள் அடைந்த தேவனுடைய ரூபமும் சாயலுமான மகிமையின் நிலையை வெளிப்படுத்துதல். Rev_4:6, Rev_15:2,

3-8. அக்கினியும் கந்தகமும் கலந்த நித்திய நரகத்தில் ஞானஸ்தானம் :-

இரண்டாம் மரணத்தில் பங்கடைந்த துன்மார்க்கர்கள் நித்திய அக்கினி நரகத்தில் ஞானஸ்தானம் பெற்றுக்கொண்ட நிலையிலே இருந்து, தாங்கள் அடைந்த தேவனுடைய மகிமையின் நிலைகளை வெளிப்படுத்துதல். Job_18:13, Rev_14:10, Rev_19:20, Rev_20:10,

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

# தலைப்பு இருபத்தைந்து

# **தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள்**

## பொருளடக்கம்-4

போஜனபான பாத்திரங்களாகிய ஆவி, ஆத்துமா,சரிரம் ஆகியவைகளின் **குணாதிசயங்களோடு தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள் ஒப்பிடப்படுகிறது**

4-0 தேவனுடைய இரட்சிப்பின் உடன்படிக்கையின் மூலம் ஜென்மசுபாவ புறம்பான மனுஷனையும் அவன் செய்கைகளையும் அழிந்தும், ஆவிக்குரிய உள்ளான மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறதினால் நாளுக்குநாள் புதிதாக்கப்பட்டு; தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவு, புத்தி, ஞானம், ஆகிய இவைகளை சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களும் அவைகளில் இடறிவிழுகிறவர்களும்:-

4-1 தேவனுடைய வார்த்தைகளோடு உடன்படிக்கை செய்தவன், பாவ சரீரத்திலே பாவத்தை ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கேற்றபடி , ஆவிக்குரிய மனிதனின் கண்கள் திறக்கப்பட்டு, நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடைய பூரண வயதுதையடைந்து, பலமான ஆகாரமாகிய நீதியின் வசனத்தில் பழக்கமுல்லவனாக வளர்ச்சியடைகிறான்.

4-2 தேவனுடைய வார்த்தைகளோடு உடன்படிக்கை செய்தவன்,பலவானாகிய ஜென்மசுபாவமான மனுஷனை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து, முந்திக் கட்டுகிறபோது: அவனுடைய வீட்டுக்குள் புகுந்து, அவனுடைய உடைமைகளாகிய ஜென்ம சுபாவங்களை நன்மைகளாக கொள்ளையிட முடியும்:-

4-3 தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் இரண்டாம் பிரதான கற்பனையாகிய உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை ஒருவன் நிறைவேற்றுகிறபோது: அவனுடைய ஆத்துமாவாகிய சொந்த சகோதரனிடத்தில் அன்புகூர்ந்து நேசிக்கிறான்:-

4-4 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும், தன் சரீரத்தின் ஜீவனை இழந்துபோகிறவன்; அதை தேவனுடைய சாயலாகவும் ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனாக உயிர்ப்பித்து இரட்சித்துக்கொள்ளுவான்:-

4-5 கர்த்தருடைய புதிய உடன்படிக்கையின் மூலம் கர்த்தருடைய சரீரமாகிய அப்பத்தையும், இரத்தமாகிய பானத்தையும், அவருடைய சமுகத்தில் உயிர்தெழுதலை நினைவுகூரும்படி போஜனபானம் பண்ணுகிறவர்கள்: முதலாவது அவர்களுடைய சரீர போஜனபானபாத்திரத்தின் உட்புறத்தை சுத்தமாக்குகிறபோது வெளிப்புறமும் சுத்தமாக்கப்படுகிறது:-

4-6 கர்த்தருடைய புதிய உடன்படிக்கையின் மூலம் கர்த்தருடைய சரீரமாகிய அப்பத்தையும், இரத்தமாகிய பானத்தையும், அவருடைய சமுகத்தில் உயிர்தெழுதலை நினைவுகூரும்படி போஜனபானம் பண்ணுகிறவர்கள்: முதலாவது அவர்களுடைய சரீர போஜனபானபாத்திரத்தின் உட்புறத்தை சுத்தமாக்காமல், வெளிப்புறத்தை மட்டும் சுத்தமாக்குகிறபோது; மனுஷர்முன்பாக நீதிமான்களாகயிருந்து, தேவனுக்கு முன்பாக அருவருப்பானவர்களாக இருக்கிறார்கள்:-

4-7 கர்த்தருடைய புதிய உடன்படிக்கையின் மூலம் நீதியின் கிரியைகள் உள்ளவன் எவனோ அவனுக்குக் பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்: நீதியின் கிரியைகள் இல்லாதவன் எவனோ, அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்பட்டு. தேவன் கனநித்திரையின் ஆவியை வரப்பண்ணி, கண்களை அடைத்து, முக்காடு போட்டார்:-

4-8 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் மூலம் ஒருவனுடைய சரீரத்தின் அவயவங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து தேவனுக்கு புத்தியுள்ள ஆராதனை செய்கிறபோது தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, மனம் புதிதாகிறதினாலே மறுரூபமடைந்து பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளுக்குரிய சாயலை தரித்துக்கொள்ளுகிறார்கள்:-

4-1 தேவனுடைய வார்த்தைகளோடு உடன்படிக்கை செய்தவன், பாவ சரீரத்திலே பாவத்தை ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கேற்றபடி , ஆவிக்குரிய மனிதனின் கண்கள் திறக்கப்பட்டு, நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடைய பூரண வயதுதையடைந்து, பலமான ஆகாரமாகிய நீதியின் வசனத்தில் பழக்கமுல்லவனாக வளர்ச்சியடைகிறான்.

Rom 8:6 மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.
Rom 8:7 எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது.
Rom 8:8 மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்.
Rom 8:9 தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.
Rom 8:10 மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்.

Rom 8:11 அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.

Rom 8:12 ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல.

Rom 8:13 மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்.

Rom 8:14 மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

Rom 8:1-8, Rom 8:9-15, Rom 12:1-3, Gal 6:12-18, Gal 5:13-17, Gal 5:18-23, 2Co 5:1-8, 1Co 15:50-54;1Co 15:55-58; Gal 4:21-25, Gal 4:26-31; 2Co 4:14-18; Col 3:9-11; Gen 3:4-7; Gen 3:8-11; Gen 3:17-21; Ecc 3:18-20, Ecc 6:3-6, Gen 3:4-7; Isa 41:21-24, Joh 10:34-38,Heb 5:12-14; 2Ti 2:11-18,

4-2 தேவனுடைய வார்த்தைகளோடு உடன்படிக்கை செய்தவன்,பலவானாகிய ஜென்மசுபாவமான மனுஷனை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து, முந்திக் கட்டுகிறபோது: அவனுடைய வீட்டுக்குள் புகுந்து, அவனுடைய உடைமைகளாகிய ஜென்ம சுபாவங்களை நன்மைகளாக கொள்ளையிட முடியும்:-

Mat 12:24 பரிசேயர் அதைக்கேட்டு: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள்.

Mat 12:25 இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்கமாட்டாது.

Mat 12:26 சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?

Mat 12:27 நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்.

Mat 12:28 நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.
Mat 12:29 அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம்.

Mat 12:30 என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.
Mat 12:31 ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை.

Mat 12:32 எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை.
Mat 12:33 மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும்.

Mar 3:23-27;Job 12:6;Pro 3:11-18; Job 22:22-30; Job 28:12-19; Job 28:20-28;1Co 2:11-16; Luk 11:20-26; Mat 12:25-30; Psa 49:6-15,Mat 16:26,

4-3 தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் இரண்டாம் பிரதான கற்பனையாகிய உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை ஒருவன் நிறைவேற்றுகிறபோது: அவனுடைய ஆத்துமாவாகிய சொந்த சகோதரனிடத்தில் அன்புகூர்ந்து நேசிக்கிறான்:-

Jas 2:8 உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்.
Jas 2:9 பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்.

Jas 2:10 எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்.
Jas 2:11 ஏனென்றால், விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால், நீ விபசாரஞ்செய்யாமலிருந்தும் கொலை செய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய்.

Jas 2:12 சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப்போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்.
Jas 2:13 ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்குமுன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்.

Mat 22:35-40, Mat 19:19; Lev 19:18; Mar 12:31; Luk 10:27-28; Rom 13:9-10; Gal 5:14; Jam 2:8-13; Luk 10:29-37; Rom 15:2; Mat 5:21-26,Mat 6:9-13; Mat 18:35,1Jo 2:9-11 , 1Jo 3:7-12, 1Jo 3:13-16, 1Jo 4:20-21 , Job 6:24-30,

3-4 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும், தன் சரீரத்தின் ஜீவனை இழந்துபோகிறவன்; அதை தேவனுடைய சாயலாகவும் ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனாக உயிர்ப்பித்து இரட்சித்துக்கொள்ளுவான்:-

Joh 12:23 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது.
Joh 12:24 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்.

Joh 12:25 தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அவன் அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்.
Joh 12:26 ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.

Joh 12:27 இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்.

Joh 12:28 பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று.

Joh 12:29 அங்கே நின்று கொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்கள். வேறுசிலர்: தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள்.
Joh 12:30 இயேசு அவர்களை நோக்கி: இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று.

Joh 12:24-27, Mat 10:32-39, Mat 16:24-26, Mar 8:34-38; Luk 9:23-27, Luk 17:28-37; Act 20:24, Act 21:13; Eph 2:10, Eph 4:21-24;Heb 11:35; Rev 12:10-12;

4-5 கர்த்தருடைய புதிய உடன்படிக்கையின் மூலம் கர்த்தருடைய சரீரமாகிய அப்பத்தையும், இரத்தமாகிய பானத்தையும், அவருடைய சமுகத்தில் உயிர்தெழுதலை நினைவுகூரும்படி போஜனபானம் பண்ணுகிறவர்கள்: முதலாவது அவர்களுடைய சரீர போஜனபானபாத்திரத்தின் உட்புறத்தை சுத்தமாக்குகிறபோது வெளிப்புறமும் சுத்தமாக்கப்படுகிறது:-

1Th 4:1 அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம்.

1Th 4:2 கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே.
1Th 4:3 நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து,
1Th 4:4 தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல்,

1Th 4:5 உங்களில் அவனவன் தன் தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து:
1Th 4:6 இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங்குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார்.

1Th 4:7 தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

1Th 4:8 ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்.

Rom 9:18-25, , 1Th 4:1-8, 2Ti 2:15-21, Luk 22:15-20; 2Co 3:6,Heb 9:15-20, 1Co 10:15-22;1Co 11:20-26, 1Co 11:27-34, Luk 13:23-30; 2Co 7:1-4; 1Pe 1:21-22; 1Jo 3:1-3

4-6 கர்த்தருடைய புதிய உடன்படிக்கையின் மூலம் கர்த்தருடைய சரீரமாகிய அப்பத்தையும், இரத்தமாகிய பானத்தையும், அவருடைய சமுகத்தில் உயிர்தெழுதலை நினைவுகூரும்படி போஜனபானம் பண்ணுகிறவர்கள்: முதலாவது அவர்களுடைய சரீர போஜனபானபாத்திரத்தின் உட்புறத்தை சுத்தமாக்காமல், வெளிப்புறத்தை மட்டும் சுத்தமாக்குகிறபோது; மனுஷர்முன்பாக நீதிமான்களாகயிருந்து, தேவனுக்கு முன்பாக அருவருப்பானவர்களாக இருக்கிறார்கள்:-

Gal 6:12 மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ, அவர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கே உங்களை விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளக் கட்டாயம்பண்ணுகிறார்கள்.

Gal 6:13 விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக்குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

Gal 6:14 நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்.

Gal 6:15 கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்.
Gal 6:16 இந்தப் பிரமாணத்தின்படி நடந்துவருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக.

Gal 6:17 இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்.

Gal 6:18 சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென்.

Gal 6:12-20;1Ti 4:1-6;1Ti 4:7-13; Col 2:1-4,Col 2:5-10, Col 2:11-15, Col 2:16-20;Col 2:21-23;Mat 23:25-28, Mar 7:20-23, Luk 11:39-44, Luk 16:15; Gen 6:5;Gal 5:16-24; Jer 2:1-9,Pro 30:11-14; Jer 4:14; Mat 12:33-35, Mat 15:19; Mat 12:33; Isa 55:7; Jer 4:14, Jer 13:27;

Eze 18:31; Luk 6:45; 2Co 7:1; Heb 10:22; Jam 4:8;

4-7 கர்த்தருடைய புதிய உடன்படிக்கையின் மூலம் நீதியின் கிரியைகள் உள்ளவன் எவனோ அவனுக்குக் பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்: நீதியின் கிரியைகள் இல்லாதவன் எவனோ, அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்பட்டு. தேவன் கனநித்திரையின் ஆவியை வரப்பண்ணி, கண்களை அடைத்து, முக்காடு போட்டார்:-

Mat 13:11 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை.
Mat 13:12 உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

Mat 13:13 அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்.
Mat 13:14 ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள்.

Mat 13:15 இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே.

Mat 13:16 உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்.

Mat 13:17 அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Mat 13:11-17,Luk 15:1-7, Joh 9:39-41; Joh 12:35-40; Rom 11:7-12; Isa 6:8-10; Isa 29:10-14; 2Co 4:4-7; 2Pe 1:4-9, 2Pe 2:1-5, 2Pe 2:6-10; 2Pe 2:11-15, 2Pe 2:16-22; 1Jo 2:9-11; 1Jo 2:15-19,

Jud 1:1-5; Jud 1:6-10;Jud 1:11-15;Jud 1:16-20;Jud 1:21-25; Deu 29:4; Isa 6:9; Jer 5:21; Eze 12:2; Mar 4:11-12; Luk 8:10; Act 28:26

4-8 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் மூலம் ஒருவனுடைய சரீரத்தின் அவயவங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து தேவனுக்கு புத்தியுள்ள ஆராதனை செய்கிறபோது தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, மனம் புதிதாகிறதினாலே மறுரூபமடைந்து பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளுக்குரிய சாயலை தரித்துக்கொள்ளுகிறார்கள்:-

Rom 8:1 ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.
Rom 8:2 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

Rom 8:3 அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

Rom 8:4 மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.
Rom 8:5 அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்.

Rom 8:6 மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

Rom 8:7 எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது.

Rom 8:8 மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்.
Rom 8:9 தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.
Rom 8:10 மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்.
Rom 8:11 அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.

Rom 8:12 ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல.
Rom 8:13 மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்.
Rom 8:14 மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

Rom 8:1-8, Rom 8:9-15, Rom 12:1-3, Luk 16:13; Joh 3:13, Joh 3:31; Rom 8:7-8; 2Co 5:1-8, 1Co 15:47-48; Phi 3:19-21; Jam 3:15-17; 1Jo 2:15-16;1Pe 4:1-4; Joh 15:18-19, Joh 17:14-16, Jam 4:4-8; 1Jo 4:1-6, 1Jo 5:19-20; Col 3:1-7;Col 3:8-13 1Ti 6:7-12;Joh 8:12, Joh 8:23-24 ,

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

# தலைப்பு இருபத்தைந்து

# **தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள்**

## பொருளடக்கம்-5

5-0 **வஸ்திரங்களின் குணாதிசயங்களோடு தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள் ஒப்பிடப்படுகிறது**

5-1 வேத பிரமாணத்தின்படி நீதியின் வஸ்திரம் தரித்து விருந்து

5-2 திராட்சரசத்திலே தன் வஸ்திரத்தையும், அங்கியையும் சுத்தம் செய்தல்.

5-3 தீமையை ஜெயங்கொள்ளுவதால் நீதியின் வஸ்திரம் தரித்து விருந்து

5-4 வேத பிரமாணத்தின்படி இரத்த சாட்சிகளுக்கு நீதியின் வஸ்திரம்

5-5 இரத்த சாட்சிகளாக மரித்தபடியால் நீதியின் வஸ்திரம்

5-6 சபைகளில் சுய நீதியின் வஸ்திரம் தரித்து விருந்து

5-7 மறுதேசத்து வஸ்திரம் தரித்திருக்கிற ராஜகுமாரரின் விருந்து.

5-8 சுய நீதியின் வஸ்திரம் / மறுதேசத்து ராஜகுமாரரின் வஸ்திரம் தரித்து விருந்து கொண்டாடுகிறவர்களின் பிரதிபலன்கள்.

5-1 வேத பிரமாணத்தின்படி நீதியின் வஸ்திரம் தரித்து விருந்து

நித்திய ஜீவ வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொள்ளு வதற்கு வேத பிரமாணத்தின்படி நீதியின் வஸ்திரம் தரித்துக் கொள்ளுதல்:-

வேத பிரமாணத்தின்படி நன்மை, தீமைகளை அறிந்து கொண்டு, தீமையை நன்மையினால் ஜெயங்கொள்ளுவதின் மூலம் நீதியின் வஸ்திரம் தரித்துக்கொண்டு நித்திய ஜீவ வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொள்ளுதல்

Rev 19:7 நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்.

Rev 19:8 சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.

Rev 19:9 பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்.

Isa_64:6, Rev_22:14, Heb_5:12-14, Amo_5:14, Gen_1:16-17, Gen_21:8-10, Gal_4:28-31, Isa_28:9, Heb_6:1-2, 2Ti_3:16-17, Tit_3:8, Eph_5:23-26,

5-2 திராட்சரசத்திலே தன் வஸ்திரத்தையும், அங்கியையும் சுத்தம் செய்தல்.

யூதர்கள் நித்திய ஜீவ வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொள்ளுவதற்காக தங்கள் வஸ்திரத்தையும், அங்கியையும் கிறிஸ்து வின் உபதேசத்தினால் சுத்தம் செய்து கொள்ளுதல் Gen 49:8-12

Gen 49:8 யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே; உன் கரம் உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும்; உன் தகப்பனுடைய புத்திரர் உன்முன் பணிவார்கள்.

Gen 49:9 யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்துகொண்டு ஏறிப்போனாய்; என் மகனே, சிங்கம்போலும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப் படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார்?

Gen 49:10 சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்.

Gen 49:11 அவன் தன் கழுதைக்குட்டியைத் திராட்சச்செடியிலும், தன் கோளிகைக் கழுதையின் குட்டியை நற்குல திராட்சச்செடியிலும் கட்டுவான்; திராட்சரசத்திலே தன் வஸ்திரத்தையும், திராட்சப்பழங்களின் இரத்தத்திலே தன் அங்கியையும் தோய்ப்பான்.

Gen 49:12 அவன் கண்கள் திராட்சரசத்தினால் சிவப்பாயும், அவன் பற்கள் பாலினால் வெண்மையாயும் இருக்கும்.

5-3 தீமையை ஜெயங்கொள்ளுவதால் நீதியின் வஸ்திரம் தரித்து விருந்து

புற ஜாதிகள் நித்திய ஜீவ வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொள்ளுவதற்கு தங்களுடைய மனசாட்சியின் பிரமானத்தின் படி தீமையை நன்மையால் ஜெயங்கொள்ளுவதால் நீதியின் வஸ் திரத்தை தரித்துக் கொள்ளுதல் :-

Joh 9:31 பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்.

Joh 9:32 பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே.

Joh 9:33 அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான்.

Joh 9:34 அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்.

Joh 9:35 அவனை அவர்கள் புறம்பே தள்ளிவிட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது: நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார்.

Joh 9:36 அதற்கு அவன்: ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றான்.

Joh 9:37 இயேசு அவனை நோக்கி: நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார்.

Joh 9:38 உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான்.

Joh 9:39 அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்.

Joh 9:40 அவருடனேகூட இருந்த பரிசேயரில் சிலர் இவைகளைக் கேட்டபொழுது: நாங்களும் குருடரோ என்றார்கள்.

Joh 9:41 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது என்றார்.

Rom 4:5 ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.

Rom 4:6 அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும் பொருட்டு:

Rom 4:7 எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்.

Rom 4:8 எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்.

Rom 4:9 இந்தப் பாக்கியம் விருத்தசேதனமுள்ளவனுக்குமாத்திரம் வருமோ, விருத்தசேதனமில்லாதவனுக்கும் வருமோ? ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறோமே.

Rom 4:10 அது எப்பொழுது அவனுக்கு அப்படி எண்ணப்பட்டது? அவன் விருத்தசேதனமுள்ளவனாயிருந்த போதோ,விருத்தசேதனமில்லாதவனாயிருந்த போதோ? விருத்தசேதனமுள்ளவனாயிருந்த போதல்ல, விருத்தசேதனமில்லாதவனாயிருந்த போதே.

Pro_1:23-25, Pro_10:17, Pro_4:13, Pro_5:6, Pro_15:31-33 , Isa_2:1-4, Mic_4:1-3,Isa_65:12-14, Jer_15:16-21, Isa_33:15-17, Job_28:12-14, Job_28:20-28, Gen_4:7, Rom_8:27-33,

5-4 வேத பிரமாணத்தின்படி இரத்த சாட்சிகளுக்கு நீதியின் வஸ்திரம்

வேத பிரமாணத்தின்படி இரத்த சாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்களுக்கு நீதியின் வஸ்திரம் கொடுக்கப்படுகிறது Rev_6:9-11,

Rev 6:9 அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன்.

Rev 6:10 அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

Rev 6:11 அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

5-5 இரத்த சாட்சிகளாக மரித்தபடியால் நீதியின் வஸ்திரம்

தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளுக்கு, இரத்த சாட்சிகளாக மரித்த புறஜாதிகளுக்கு வெண்மையான வஸ்திரம் கொடுக்கப்படுகிறது:-

புற ஜாதிகள் தங்களுடைய மனசாட்சியின் பிரமாணத்தின்படி தீமையை நன்மையால் ஜெயங்கொள்ளுவதற்கு, இரத்த சாட்சிகளாக மரித்தபடியால் வெண்மையான வஸ்திரம் கொடுக்கப்படுகிறது Rev 7:9-17,

Rev 7:9 இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.

Rev 7:10 அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

Rev 7:11 தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு:

Rev 7:12 ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென், என்றார்கள்.

Rev 7:13 அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான்.

Rev 7:14 அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.

Rev 7:15 ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.

Rev 7:16 இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை.

Rev 7:17 சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்.

5-6 சபைகளில் சுய நீதியின் வஸ்திரம் தரித்து விருந்து

வேத பிரமாணத்தின்படி நீதியின் வஸ்திரம் தரித்துக் கொண்டு நித்திய ஜீவ வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொள்ளா மல், தங்கள் சுய நீதியின் வஸ்திரம் தரித்துக்கொண்டு தேவனுடைய வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசாக / பிரதிபலனாக இந்த பூமியில் தங்கள் விரும்பின பதவிகளை தங்க ளுடைய பிரதிபலனுக்காக தாங்களே, தங்களுக்கு நியமித்துக் கொள்ளுதல்

**Est 1:9** ராஜஸ்திரீயாகிய வஸ்தியும் ராஜாவாகிய அகாஸ்வேருவின் அரமனையிலே ஸ்திரீகளுக்கு ஒரு விருந்து செய்தாள்.

Est 1:10 ஏழாம் நாளிலே ராஜா திராட்சரசத்தினால் களிப்பாயிருக்கும்போது, மகா ரூபவதியாயிருந்த ராஜஸ்திரீயாகிய வஸ்தியின் சௌந்தரியத்தை ஜனங்களுக்கும் பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி, ராஜகிரீடம் தரிக்கப்பட்டவளாக, அவளை ராஜாவுக்கு முன்பாக அழைத்துவரவேண்டுமென்று,

Est 1:11 ராஜாவாகிய அகாஸ்வேருவின் சமுகத்தில் சேவிக்கிற மெகுமான், பிஸ்தா, அற்போனா, பிக்தா, அபக்தா, சேதார், கர்காஸ் என்னும் ஏழு பிரதானிகளுக்கும் கட்டளையிட்டான்.

Est 1:12 ஆனாலும் பிரதானிகள் மூலமாய் ராஜா சொல்லியனுப்பின கட்டளைக்கு ராஜஸ்திரீயாகிய வஸ்தி வரமாட்டேன் என்றாள்; அப்பொழுது ராஜா கடுங்கோபமடைந்து, தனக்குள்ளே மூர்க்கவெறிகொண்டான்.

Est 1:13 அச்சமயத்தில் ராஜசமுகத்தைத் தரிசிக்கிறவர்களும், ராஜ்யத்தின் முதல் ஆசனங்களில் உட்காருகிறவர்களுமான கர்ஷேனா, சேதார், அத்மாதா, தர்ஷீஸ், மேரேஸ், மர்சேனா, மெமுகான் என்னும் பெர்சியர் மேதியருடைய ஏழு பிரபுக்களும் அவன் சமீபத்தில் இருந்தார்கள்.

Est 1:14 ராஜா நியாயப்பிரமாணத்தையும் ராஜநீதியையும் அறிந்தவர்களிடத்தில் பேசுவது தனக்கு வழக்கமானபடியால், காலாகால வர்த்தமானங்களை அறிந்த பண்டிதர்களை நோக்கி:

Est 1:15 ராஜாவாகிய அகாஸ்வேரு பிரதானிகள் மூலமாய்ச் சொல்லியனுப்பின கட்டளையின்படி ராஜஸ்திரீயாகிய வஸ்தி செய்யாமற்போனதினிமித்தம், தேசச்சட்டத்தின்படி அவளுக்குச் செய்யவேண்டியது என்ன என்று கேட்டான்.

Est 1:16 அப்பொழுது மெமுகான் ராஜாவுக்கும் பிரபுக்களுக்கும் முன்னே பிரதியுத்தரமாக: ராஜஸ்திரீயாகிய வஸ்தி ராஜாவுக்கு மாத்திரம் அல்ல, ராஜாவாகிய அகாஸ்வேருவினுடைய சகல நாடுகளிலுமுள்ள சகல பிரபுக்களுக்கும் சகல ஜனங்களுக்குங்கூட அநியாயஞ்செய்தாள்.

Est 1:17 ராஜாவாகிய அகாஸ்வேரு ராஜஸ்திரீயாகிய வஸ்தியைத் தமக்கு முன்பாக அழைத்துவரச் சொன்னபோது, அவள் வரமாட்டோம் என்கிற செய்தி எல்லா ஸ்திரீகளுக்கும் பிரசித்தமானால், அவர்களும் தங்கள் புருஷரைத் தங்கள் பார்வையில் அற்பமாய் எண்ணுவார்கள்.

Est 1:18 இன்றையதினமே பெர்சியாவிலும் மேதியாவிலுமுள்ள பிரபுக்களின் ஸ்திரீகள் ராஜஸ்திரீயின் செய்தியைக் கேட்கும்போது, ராஜாவின் பிரபுக்களுக்கெல்லாம் அப்படியே சொல்லுவார்கள்; மிகுந்த அசட்டையும் எரிச்சலும் விளையும்.

Est 1:19 ராஜாவுக்குச் சம்மதியாயிருந்தால், வஸ்தி இனி ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு முன்பாக வரக்கூடாது என்றும், அவளுடைய ராஜமேன்மையை அவளைப் பார்க்கிலும் உத்தமியாகிய மற்றொரு ஸ்திரீக்கு ராஜா கொடுப்பாராக என்றும், அவரால் ஒரு ராஜகட்டளை பிறந்து, அது மீறப்படாதபடிக்கு, பெர்சியாவுக்கும் மேதியாவுக்கும் உரிய தேசச் சட்டத்திலும் எழுதப்படவேண்டும்.

Est 1:20 இப்படி ராஜா தீர்த்த காரியம் தமது விஸ்தீரணமான ராஜ்யமெங்கும் கேட்கப்படும்போது, பெரியோர்முதல் சிறியோர்மட்டுமுள்ள எல்லா ஸ்திரீகளும் தங்கள் புருஷரைக் கனம்பண்ணுவார்கள் என்றான்.

Est 1:21 இந்த வார்த்தை ராஜாவுக்கும் பிரபுக்களுக்கும் நலமாய்த் தோன்றினதினால், ராஜா மெமுகானுடைய வார்த்தையின்படியே செய்து,

Est 1:22 எந்தப் புருஷனும் தன் வீட்டுக்குத் தானே அதிகாரியாயிருக்கவேண்டும் என்றும், இதை அந்தந்த ஜனங்களுடைய பாஷையிலே பிரசித்தம்பண்ணவேண்டும் என்றும், அந்தந்த நாட்டில் வழங்குகிற அட்சரத்திலும், அந்தந்த ஜாதியார் பேசுகிற பாஷையிலும், ராஜாவின் சகல நாடுகளுக்கும் கட்டளை எழுதி அனுப்பினான். Isa_4:1, Rom_2:17-24, 1Ti_1:5-11, Isa_2:5-6, Isa_5:8-12, 1Co_3:1-9, Jer_4:1-6, Jdg_5:9-11, Jud_1:10-16,

5-7 மறுதேசத்து வஸ்திரம் தரித்திருக்கிற ராஜகுமாரரின் விருந்து.

வேத பிரமாணத்தின்படி நீதியின் வஸ்திரம் தரித்துக் கொண்டு நித்திய ஜீவ வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொள் ளாமல், தங்கள் சுய நீதியின் வஸ்திரம் தரித்துக்கொண்டு தேவனுடைய வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொண்டவர்கள் : தங்கள் மனம் விரும்பின தேவனுடைய இராஜ்ஜியத்தின் பதவிகளை தங்களுடைய பிரதிபலனுக்காக இந்த பூமியிலே தாங்களே, தங்களுக்கு நியமித்துக் கொள்ளுதல்

Zep 1:4 நான் யூதாவின்மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின்மேலும் என் கையை நீட்டி, பாகாலில் மீதியாயிருக்கிறதையும், ஆசாரியர்களோடேகூடக் கெம்மரீம் என்பவர்களின் பேரையும்,

Zep 1:5 வீடுகளின்மேல் வானசேனையைப் பணிகிறவர்களையும், கர்த்தர்பேரில் ஆணையிட்டு, மல்காமின்பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும்,

Zep 1:6 கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவேன்.

Zep 1:7 கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது; கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம்பண்ணி, அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார்.

Zep 1:8 கர்த்தருடைய யாகத்தின் நாளிலே நான் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன்.

Zep 1:9 வாசற்படியைத் தாண்டி, கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற யாவரையும் அந்நாளிலே தண்டிப்பேன்.

Zep 1:10 அந்நாளிலே மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தமும், நகரத்தின் இரண்டாம் பாகத்திலிருந்து அலறுதலும், மேடுகளிலிருந்து மகா சங்காரத்தின் இரைச்சலும் உண்டாகுமென்று கர்த்தர் சொல்லுகிறார். Zep_1:4-10, Amo_6:1-8, Amo_6:9-13, Dan_5:1, Isa_65:8-14, 1Co_11:18-22, Pro_5:1-6,Pro_5:7-13, Pro_5:14-20, Pro_5:21-23, Pro_2:10-15, Pro_2:16-19, Pro_2:20-22, Pro_6:23-24, Pro_7:1-5 , Pro_7:6-10, Pro_7:11-15, Pro_7:16-20, Pro_7:21-27, Pro_9:13-18,

5-8 சுய நீதியின் வஸ்திரம் / மறுதேசத்து ராஜகுமாரரின் வஸ்திரம் தரித்து விருந்து கொண்டாடுகிறவர்களின் பிரதிபலன்கள்.

வேத பிரமாணத்தின்படி நீதியின் வஸ்திரம் தரித்துக்கொண்டு நித்திய ஜீவ வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொள்ளாமல், தங்கள் சுய நீதியின் வஸ்திரம் /

மறுதேசத்து ராஜ குமாரரின் வஸ்திரம் தரித்துக்கொண்டு தேவனுடைய வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொண்டவர்களுக்கு தேவனுடைய நீதியுள்ள நியாயத் தீர்ப்பு

வேத பிரமாணத்தின்படி நீதியின் வஸ்திரம் தரித்துக்கொண்டு நித்திய ஜீவ வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொண்டவர்களுக்கு: தேவன் தம்முடைய இராஜ்ஜியத்தின் பதவிகளை பரிசாக கொடுக்க வரும்போது ;

Luk 14:7 விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தெரிந்துகொண்டதை அவர் பார்த்து, அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்:

Luk 14:8 ஒருவனால் கலியாணத்துக்கு நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே; உன்னிலும் கனமுள்ளவன் ஒருவேளை அவனால் அழைக்கப்பட்டிருப்பான்.

Luk 14:9 அப்பொழுது உன்னையும் அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில் வந்து: இவருக்கு இடங்கொடு என்பான்; அப்பொழுது நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்திற்குப் போகவேண்டியதாயிருக்கும்.

Luk 14:10 நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, போய், தாழ்ந்த இடத்தில் உட்காரு; அப்பொழுது உன்னை அழைத்தவன் வந்து: சிநேகிதனே, உயர்ந்த இடத்தில் வாரும் என்று சொல்லும்போது, உன்னுடனேகூடப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனமுண்டாகும்.

Luk 14:11 தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

ஆனால் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களில் ஒருவன் பந்தியில் மிகவும் முதன்மையான இடமாகிய இராஜாவின் ஸ்தானத் தில் அமர்ந்து கொண்டு, நான் தான் கிறிஸ்து என்று சொல்லிக் கொள்ளுகிற இராஜ வஸ்திரத்தை தரித்திருக்கிறவனைப் பார்த்து :

Mat 22:11 விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு:

Mat 22:12 சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான்.

Mat 22:13 அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்.

Mat 22:14 அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

Mat 24:3 பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

Mat 24:4 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;

Mat 24:5 ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

Isa 65:12 Isa_65:12, ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் : இதோ, என் ஊழியக்காரர் புசிப்பார்கள், நீங்களோ பசியாயிருப்பீர்கள் ; இதோ, என் ஊழியக்காரர் குடிப்பார்கள், நீங்களோ தாகமாயிருப்பீர்கள்; இதோ, என் ஊழியக்காரர் சந்தோஷப்படுவார்கள், நீங்களோ வெட்கப்படுவீர்கள்.

Isa 65:13 Isa_65:13, இதோ, என் ஊழியக்காரர் மன மகிழ்ச்சியினாலே கெம்பீரிப்பார்கள், நீங்களோ மன நோவினாலே அலறி, ஆவியின் முறிவினாலே புலம்புவீர்கள்.

. Mat 23:5-12, Mat 24:23-26, Joh 7:18, Joh 12:43, Isa 2:5-6, 1Th 2:6,Rom 11:8-10, Psa 69:22-28, Psa 109:5-10, Isa 28:7-13,Isa 29:9-14,Jer 7:34, Jer 16:9, Jer 25:10, Rev 18:23,

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

## தலைப்பு இருபத்தைந்து

## **தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள்**

### பொருளடக்கம்-6

புறம்பான ஜென்மசுபாவ மனுஷனுடைய நியாயப்பிரமாணம், உள்ளான ஆவிக்குரிய மனுஷனுடைய

நீதிப்பிரமாணம்,,ஆகியவைகள் **விவாக உடன்படிக்கையின் குணாதிசயங்களோடு ஒப்பிடப்படுகிறது**

6-1 தேவனுடைய வார்த்தைகளோடு உடன்படிக்கை செய்தவன், தன்னுடைய,ஜென்ம சுபாவமான மனுஷனுடைய பாவத்தை; தன்னுடைய பாவ சரீரத்திலே ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கேற்றபடி, தன்னுடைய ஆவிக்குரிய மனுஷனுடைய கண்கள் திறக்கப்பட்டு, நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடைய பூரண வயதுதையடைந்து, பலமான ஆகாரமாகிய நீதியின் வசனத்தில் பழக்கமுல்லவனாக வளர்ச்சியடைகிறான்.

6-2 தேவனுடைய வார்த்தைகளோடு உடன்படிக்கை செய்தவன், தன்னுடைய பலவானாகிய ஜென்ம சுபாவமான மனுஷனை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து, முந்திக் கட்டுகிறபோது: அவனுடைய வீட்டுக்குள் புகுந்து, அவனுடைய உடைமைகளாகிய ஜென்ம சுபாவங்களை தேவனுடைய நியாயத்தீர்ப்பின் மூலம் தன்னுடைய ஆவிக்குரிய மனிதனுக்கு நன்மைகளாக கொள்ளையிட முடியும்:-

6-3 தேவனுடைய இரட்சிப்பின் உடன்படிக்கையின் மூலம் ஜென்மசுபாவ புறம்பான மனுஷனையும் அவன் செய்கைகளையும் அழிந்தும், ஆவிக்குரிய உள்ளான மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறதினால் நாளுக்குநாள் புதிதாக்கப்பட்டு; தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவு, புத்தி, ஞானம், ஆகியவைகளை சுதந்தரித்துக் கொள்ளுகிறார்கள்:-

6-4 புறம்பான ஜென்மசுபாவ மனுஷனுடைய நியாயப்பிரமாணம் **விவாக உடன்படிக்கையின் குணாதிசயங்களோடு ஒப்பிடப்படுகிறது**:-

6-5 உள்ளான ஆவிக்குரிய மனுஷனுடைய நீதிப்பிரமாணம் **விவாக உடன்படிக்கையின் குணாதிசயங்களோடு ஒப்பிடப்படுகிறது**:-

6-6 உள்ளான ஆவிக்குரிய மனுஷனுடைய நீதிப்பிரமாணத்தை; இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள் மூலம் தேடாமல், புறம்பான ஜென்மசுபாவ மனுஷனுடைய நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே அடைய முயற்சிசெய்கிறவர்கள் சீயோனிலிருக்கிற திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லில் இடறி விழுகிறார்கள்:-

6-7 உள்ளான ஆவிக்குரிய மனுஷனுடைய நீதிப்பிரமாணத்தை; இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள் மூலம் தேடாமல், புறம்பான

ஜென்ம சுபாவ மனுஷனுடைய நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே அடைய முயற்சிசெய்கிறவர்கள்; ஏழு பரஸ்திரீகளை பின்தொடர்ந்து, தங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து, தங்கள் சொந்த வஸ்திரத்தை தரித்துக்கொண்டு, தங்கள் நிந்தை நீங்கும்படிக்கு ஒரே பூரண புருஷனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் பேர்மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும் என்பார்கள்:-

6-8 நியாயப்பிரமாணம் மூலம் புறம்பான ஜென்மசுபாவ மனுஷனுடைய ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம், இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் மூலம் உள்ளான ஆவிக்குரிய மனுஷனுடைய , நீதியைக் கொடுக்கும் ஊழியம்;அகியவைகளுடைய மகிமையையுடைய வேறுபாடுகள்:-

6-1 தேவனுடைய வார்த்தைகளோடு உடன்படிக்கை செய்தவன், தன்னுடைய,ஜென்ம சுபாவமான மனுஷனுடைய பாவத்தை; தன்னுடைய பாவ சரீரத்திலே ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கேற்றபடி, தன்னுடைய ஆவிக்குரிய மனுஷனுடைய கண்கள் திறக்கப்பட்டு, நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடைய பூரண வயதுதையடைந்து, பலமான ஆகாரமாகிய நீதியின் வசனத்தில் பழக்கமுல்லவனாக வளர்ச்சியடைகிறான்:-

மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள். Rom 8:6-8

தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். Rom 8:9-10

அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. Rom 8:11-12

மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். Rom 8:13-14

Rom 8:1-8, Rom 8:9-15, Rom 12:1-3, Gal 6:12-18, Gal 5:13-17, Gal 5:18-23, 2Co 5:1-8, 1Co 15:50-54;1Co 15:55-58; Gal 4:21-25, Gal 4:26-31; 2Co 4:14-18; Col 3:9-11; Gen 3:4-7; Gen 3:8-11; Gen 3:17-21; Ecc 3:18-20, Ecc 6:3-6, Gen 3:4-7; Isa 41:21-24, Joh 10:34-38,Heb 5:12-14; 2Ti 2:11-18,

6-2 தேவனுடைய வார்த்தைகளோடு உடன்படிக்கை செய்தவன், தன்னுடைய பலவானாகிய ஜென்மசுபாவமான மனுஷனை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து, முந்திக் கட்டுகிறபோது: அவனுடைய வீட்டுக்குள் புகுந்து, அவனுடைய உடைமைகளாகிய ஜென்ம சுபாவங்களை தேவனுடைய நியாயத்தீர்ப்பின் மூலம் தன்னுடைய ஆவிக்குரிய மனிதனுக்கு நன்மைகளாக கொள்ளையிட முடியும்:-

பரிசேயர் அதைக்கேட்டு: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்கமாட்டாது. Mat 12:24-25

சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். Mat 12:26-27

நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். Mat 12:28-29

என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான். ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்:

எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. Mat 12:30-31

எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை. மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும். Mat 12:32-33

Mar 3:23-27;Job 12:6;Pro 3:11-18; Job 22:22-30; Job 28:12-19; Job 28:20-28;1Co 2:11-16; Luk 11:20-26; Mat 12:25-30; Psa 49:6-15,Mat 16:26,

6-3 தேவனுடைய இரட்சிப்பின் உடன்படிக்கையின் மூலம் ஜென்மசுபாவ புறம்பான மனுஷனையும் அவன் செய்கைகளையும் அழிந்தும், ஆவிக்குரிய உள்ளான மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறதினால் நாளுக்குநாள் புதிதாக்கப்பட்டு; தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவு, புத்தி, ஞானம், ஆகியவைகளை சுதந்தரித்துக் கொள்ளுகிறார்கள்:-

நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள். இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். Col 3:7-8

ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே. Col 3:9-10

அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார். Col 3:11

Col 3:9-11; 2Co 4:15-16;Rom 2:27-29; Eph 3:15-19;Gal 4:21-25, Gal 4:26-31;

1Co 2:11-16, 1Co 15:35-45;

6-4 புறம்பான ஜென்மசுபாவ மனுஷனுடைய நியாயப்பிரமாணம் **விவாக உடன்படிக்கையின் குணாதிசயங்களோடு ஒப்பிடப்படுகிறது**:-

நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா? Rom 7:1

அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள். Rom 7:2

ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம்பண்ணினாலும் விபசாரியல்ல. Rom 7:3

அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள். Rom 7:4 நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது. Rom 7:5

இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். Rom 7:6

Rom 7:1-5; Rom 7:6-10; Rom 7:11-15; Rom 7:16-20; Rom 7:21-25; 1Ti 1:7-11, Rom 2:17-24,Rom 2:25-29,

6-5 உள்ளான ஆவிக்குரிய மனுஷனுடைய நீதிப்பிரமாணம் **விவாக உடன்படிக்கையின் குணாதிசயங்களோடு ஒப்பிடப்படுகிறது**:-

நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, அவனவன் தன் தன் சகோதரனுக்குத் துரோகம்பண்ணுவானேன்? Mal 2:10

யூதா ஜனங்கள் துரோகம்பண்ணினார்கள்; இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்யப்பட்டது; கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா

ஜனங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கி அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம்பண்ணினார்கள். Mal 2:11

இப்படிச் செய்கிறவன் எவனோ, அவன் காவல்காக்கிறவனாயினும், உத்தரவு கொடுக்கிறவனாயினும், சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துகிறவனாயினும், அவனை யாக்கோபின் கூடாரங்களில் இராதபடிக்குக் கர்த்தர் சங்கரிப்பார். Mal 2:12

நீங்கள் இரண்டாந்தரமும் இதைச் செய்து, கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்புகிறீர்கள்; ஆகையால், அவர் இனிக் காணிக்கையை மதியார், அதை உங்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக்கொள்ளவுமாட்டார். Mal 2:13

ஏன் என்று கேட்கிறீர்கள்; கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்; உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம்பண்ணினாயே. Mal 2:14

அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம்பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். Mal 2:15

தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்; அப்படிப்பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஆகையால் நீங்கள் துரோகம்பண்ணாமல் உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். Mal 2:16

Mal 2:10-16; Pro 5:15-23, Ecc 9:7-12;1Co 2:11-16; ,Phi 3:9-15;

6-6 உள்ளான ஆவிக்குரிய மனுஷனுடைய நீதிப்பிரமாணத்தை; இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள் மூலம் தேடாமல், புறம்பான ஜென்மசுபாவ மனுஷனுடைய நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே அடைய முயற்சிசெய்கிறவர்கள் சீயோனிலிருக்கிற திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லில் இடறி விழுகிறார்கள்:-

உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே; ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே. இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள். 1Co 5:1-2

நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடேகூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக்குறித்து நான் கூட இருக்கிறதுபோல, நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில், 1Co 5:3-4

அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச்செய்கிறேன். நீங்கள் மேன்மைபாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? 1Co 5:5-6

ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். 1Co 5:7-8
6-7 உள்ளான ஆவிக்குரிய மனுஷனுடைய நீதிப்பிரமாணத்தை; இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள் மூலம் தேடாமல், புறம்பான ஜென்ம சுபாவ மனுஷனுடைய நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே அடைய முயற்சிசெய்கிறவர்கள்; ஏழு பரஸ்திரீகளை பின்தொடர்ந்து, தங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து, தங்கள் சொந்த வஸ்திரத்தை தரித்துக்கொண்டு, தங்கள் நிந்தை நீங்கும்படிக்கு ஒரே பூரண புருஷனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் பேர்மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும் என்பார்கள்:-

ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்போது, நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாதுகாக்கும். அதினால் நீ துன்மார்க்கனுடைய வழிக்கும், மாறுபாடு பேசுகிற மனுஷனுக்கும், அந்தகார வழிகளில் நடக்க நீதிநெறிகளை விட்டு, Pro 2:10-13

தீமைசெய்ய மகிழ்ந்து, துன்மார்க்கருடைய மாறுபாடுகளில் களிகூருகிறவர்களுக்கும்,
மாறுபாடான பாதைகளிலும் கோணலான வழிகளிலும் நடக்கிறவர்களுக்கும் நீ தப்புவிக்கப்படுவாய். தன் இளவயதின் நாயகனை விட்டு, தன் தேவனுடைய உடன்படிக்கையை மறந்து, இச்சகமான வார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கும் தப்புவிக்கப்படுவாய். Pro 2:14-17

அவளுடைய வீடு மரணத்துக்கும், அவளுடைய பாதைகள் மரித்தோரிடத்திற்கும் சாய்கிறது. அவளிடத்தில் போகிறவர்களில் ஒருவரும் திரும்புகிறதில்லை, ஜீவபாதைகளில் வந்து சேருகிறதுமில்லை. ஆதலால் நீ நல்லவர்களின் வழியிலே நடந்து, நீதிமான்களின் பாதைகளைக் காத்துக்கொள்வாயாக. Pro 2:18-20

செவ்வையானவர்கள் பூமியிலே வாசம்பண்ணுவார்கள்; உத்தமர்கள் அதிலே தங்கியிருப்பார்கள். துன்மார்க்கரோ பூமியிலிருந்து அறுப்புண்டுபோவார்கள்; துரோகிகள் அதில் இராதபடிக்கு நிர்மூலமாவார்கள். Pro 2:21 -22

6-8 நியாயப்பிரமாணம் மூலம் புறம்பான ஜென்மசுபாவ மனுஷனுடைய ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம், இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் மூலம் உள்ளான ஆவிக்குரிய மனுஷனுடைய , நீதியைக் கொடுக்கும் ஊழியம்;அகியவைகளுடைய மகிமையையுடைய வேறுபாடுகள்:-

புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது. எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக்கூடாதிருந்தார்களே. 2Co 3:6-7

ஒழிந்துபோகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமை யுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்? ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. 2Co 3:8-9

இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்குமுன்பாக மகிமைப்பட்டதல்ல. அன்றியும் ஒழிந்துபோவதே மகிமையுள்ளதாயிருந்ததானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாதலால், மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம். 2Co 3:10-12

மேலும் ஒழிந்துபோவதின் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப்பாராதபடிக்கு, மோசே தன் முகத்தின்மேல் முக்காடு போட்டுக்கொண்டதுபோல நாங்கள் போடுகிறதில்லை. அவர்களுடைய மனது கடினப்பட்டது; இந்நாள்வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில், அந்த முக்காடு நீங்காமலிருக்கிறது; அது கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது. 2Co 3:13-14

மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள்வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறதே. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம். கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. 2Co 3:15-17

2Co 3:18 நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

தலைப்பு இருபத்தைந்து

## தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள்

பொருளடக்கம்-7

**பாதரட்சைகளின் குணாதிசயங்களோடு தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள் ஒப்பிடப்படுகிறது**

7-1 **சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தரித்துக்கொள்ளுகிறவர்களுடைய . தேவனுடைய உடன்படிக்கை**

7-2 **ஆவிக்குரிய புது உடன்படிக்கையின் மூலம் நீதியைக் கொடுக்கும் ஊழியர் அழைப்பு**

7-3 **பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிறவர்களுடைய தேவனுடைய இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது**.

7-4 **தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினபடியால் தங்களுடைய ஊழியர் அழைப்பை இழந்து போகிறார்கள்**

7-5 **என் பரிசுத்த ஸ்தலத்தை நான் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறேன்**; **உங்கள் பாகைகள் உங்கள் தலைகளிலும்**, **உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களிலும் இருக்கும்**; **நீங்கள் புலம்பாமலும் அழாமலும் இருந்து**, **உங்கள் அக்கிரமங்களில் வாடிப்போய்**, **ஒருவரையொருவர் பார்த்துத் தவிப்பீர்கள்**.

7-6 **மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப்படுத்தும்படிக்கு**, **இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால்**, **ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி**,

மற்றவனுக்குக் கொடுப்பான், இது இஸ்ரவேலிலே வழங்கின உறுதிப்பாடு.

7-7 தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, தங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமடைகிறவர்கள்; தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், தேவன் தங்களுக்கு பகிர்ந்த விசுவாச அளவுப்பிரமாணத்தின்படி ஊழியர் அழைப்பை பெற்றுக்கொள்ளுகிறார்கள்

7-1 சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தரித்துக்கொள்ளுகிறவர்களுடைய . தேவனுடைய உடன்படிக்கை

நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். Eph 6:11

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. Eph 6:12

ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். Eph 6:13

சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; Eph 6:14-15

பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக

**விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.** Eph 6:16-17

**எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.** Eph 6:18

Exo_12:11, Exo_12:48,Deu_29:5, Eph_6:11-18;Num_9:14, Num_15:15-16; Deu_29:5,

7-2 **ஆவிக்குரிய புது உடன்படிக்கையின் மூலம் நீதியைக் கொடுக்கும் ஊழியர் அழைப்பு**

**புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது.** 2Co 3:6

**எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக்கூடாதிருந்தார்களே.** 2Co 3:7

**ஒழிந்துபோகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்?** 2Co 3:8

**ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்குமுன்பாக மகிமைப்பட்டதல்ல.**2Co 3:9-10

அன்றியும் ஒழிந்துபோவதே மகிமையுள்ளதாயிருந்ததானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாதலால், மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம். 2Co 3:11-12

மேலும் ஒழிந்துபோவதின் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப்பாராதபடிக்கு, மோசே தன் முகத்தின்மேல் முக்காடு போட்டுக்கொண்டதுபோல நாங்கள் போடுகிறதில்லை. 2Co 3:13

அவர்களுடைய மனது கடினப்பட்டது; இந்நாள்வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில், அந்த முக்காடு நீங்காமலிருக்கிறது; அது கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது. 2Co 3:14

மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள்வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறதே. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம். கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. 2Co 3:15-17

நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். 2Co 3:18

1Co_7:19; Rom_2:25-29,Gal_5:6, Gal_6:15, Gal_3:28; Col_3:11; 2Co_3:6-12, 2Co_3:13-18,

7-3 பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிறவர்களுடைய தேவனுடைய இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது.

எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள். Joh 4:20

அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது. Joh 4:21

நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. Joh 4:22

உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். Joh 4:23

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார். Joh 4:24

அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள். அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார். Joh 4:25-26

Joh_4:21-26, Rom_9:4-5; Rom_3:1-2; Heb_7:14;Gen_49:8-12; Isa_40:9-10, Isa_52:7-12 ; Nah_1:15;Son_7:1-5, Son_7:6-13, Luk_15:22,

7-4 தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினபடியால் தங்களுடைய ஊழியர் அழைப்பை இழந்து போகிறார்கள்

பூர்வகாலந்துவக்கி நான் உன் நுகத்தடியை முறித்து, உன் கட்டுகளை அறுத்தேன்; நான் அடிமைப்படுவதில்லையென்று நீயும் சொன்னாயே; ஆகிலும், உயரமான சகல மேட்டின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் நீ வேசியாய்த் திரிகிறாய். Jer 2:20

நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன? Jer 2:21

நீ உன்னை உவர்மண்ணினாலே கழுவி, அதிக சவுக்காரத்தைக் கையாடினாலும், உன் அக்கிரமத்தின் கறைகள் எனக்கு முன்பாக இருக்குமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். Jer 2:22

நான் தீட்டுப்படவில்லை; நான் பாகால்களைப் பின்பற்றவில்லை என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? பள்ளத்தாக்கிலே நீ நடக்கிற மார்க்கத்தைப் பார்; நீ செய்ததை உணர்ந்துகொள்; தாறுமாறாய் ஓடுகிற வேகமான பெண்ணொட்டகம் நீ. Jer 2:23

வனாந்தரத்திலே பழகினதும், தன் இச்சையின் மதவெறியிலே காற்றை உட்கொள்ளுகிறதுமான காட்டுக்கழுதை நீ; அதின் ஆவலை நிறுத்தி, அதைத் திருப்புகிறவன் யார்? அதைத் தேடுகிறவர்கள் ஒருவரும் வருத்தப்படவேண்டியதில்லை; அதின் மாசத்தில் அதைக் கண்டுபிடிப்பார்கள். Jer 2:24
உன் கால் வெறுங்காலாகாதபடிக்கும், உன் தொண்டை வறட்சியடையாதபடிக்கும் அடக்கிக்கொள் என்றால், நீ: அது கூடாதகாரியம்; நான் அப்படிச் செய்யமாட்டேன்; அந்நியரை நேசிக்கிறேன்; அவர்கள் பிறகே போவேன் என்கிறாய். Jer 2:25

7-5 என் பரிசுத்த ஸ்தலத்தை நான் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறேன்; உங்கள் பாகைகள் உங்கள் தலைகளிலும், உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களிலும் இருக்கும்; நீங்கள் புலம்பாமலும் அழாமலும் இருந்து, உங்கள் அக்கிரமங்களில் வாடிப்போய், ஒருவரையொருவர் பார்த்துத் தவிப்பீர்கள்.

நீ இஸ்ரவேல் வீட்டாரை நோக்கி, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, உங்கள் பலத்தின் முக்கியமும் உங்கள் கண்களின் விருப்பமும் உங்கள் ஆத்துமாவின் வாஞ்சையுமாகிய என் பரிசுத்த ஸ்தலத்தை நான் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறேன்; நீங்கள் விட்டுவந்த உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள். Eze 24:21

அப்பொழுது நான் செய்ததுபோல நீங்களும் செய்வீர்கள்; தாடியை மூடாமலும் துக்கங்கொண்டாடுகிறவர்களின் அப்பத்தைப் புசியாமலும் இருப்பீர்கள். உங்கள் பாகைகள் உங்கள் தலைகளிலும், உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களிலும் இருக்கும்; நீங்கள் புலம்பாமலும் அழாமலும் இருந்து, உங்கள் அக்கிரமங்களில் வாடிப்போய், ஒருவரையொருவர் பார்த்துத் தவிப்பீர்கள். Eze 24:22-23

அப்படியே எசேக்கியேல் உங்களுக்கு அடையாளமாக இருப்பான்; அவன் செய்தபடி எல்லாம் நீங்களும் செய்வீர்கள்; இப்படி வரும்போது

**நான் கர்த்தராகிய ஆண்டவர் என்று அறிந்துகொள்வீர்கள் என்று சொல் என்று உரைத்தார் என்றேன்.** Eze 24:24

Isa_4:1;Joh_19:23-24, Amo_8:4-10,Amo_8:11-14, Psa_108:9; Isa_20:2; Eze_24:20-24; Eze_24:25-27;

7-6 **மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப்படுத்தும்படிக்கு, இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால், ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி, மற்றவனுக்குக் கொடுப்பான், இது இஸ்ரவேலிலே வழங்கின உறுதிப்பாடு.**

**அப்பொழுது போவாஸ்: நீர் நகோமியின் கையிலே அந்த வயல்நிலத்தை வாங்குகிற நாளிலே மரித்தவனுடைய சுதந்தரத்தில் அவன் பேரை நிலைநிற்கப்பண்ணும்படிக்கு, அதை மரித்தவன் மனைவியாகிய மோவாபிய ஸ்திரீயான ரூத் கையிலும் வாங்கவேண்டியது என்றான்.** Rth 4:5

**அப்பொழுது அந்தச் சுதந்தரவாளி: நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு, நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன்; நான் மீட்கத்தக்கதை நீர் மீட்டுக்கொள்ளும்; நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன் என்றான்.** Rth 4:6

**மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப்படுத்தும்படிக்கு, இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால், ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி, மற்றவனுக்குக் கொடுப்பான், இது இஸ்ரவேலிலே வழங்கின உறுதிப்பாடு.** Rth 4:7

**அப்படியே அந்தச் சுதந்தரவாளி போவாசை நோக்கி: நீர் அதை வாங்கிக்கொள்ளும் என்று சொல்லி, தன் பாதரட்சையைக் கழற்றிப் போட்டான்.** Rth 4:8

Rth_4:5-8 ; Rth_4:1-4 ; Deu_25:5-10 , Mat_22:24-30; Luk_20:28-36; Mat_1:5, Son_5:3, Joh_13:4-10; Rom_11:11-15, Rom_11:16-20; Rom_11:21-25, Rom_11:26-30;Rom_11:31-36;

7-7 **தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, தங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமடைகிறவர்கள்; தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு**

**மிஞ்சி எண்ணாமல், தேவன் தங்களுக்கு பகிர்ந்த விசுவாச அளவுப்பிரமாணத்தின்படி ஊழியர் அழைப்பை பெற்றுக்கொள்ளுகிறார்கள்**

Rom 12:1 **அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.**

**Rom 12:2 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**

Rom 12:3 **அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.**

1Co 12:4-7, 1Co 12:28-29; 2Co 10:12-18;2Co 3:6-12, 2Co 3:13-18, Rom 12:1-4; Rom 12:5-8;Eph 4:11-15; Luk 10:2-6, Luk 9:3-5, Luk 22:35-37; Mat 10:5-10; Mar 6:7-11; Luk 3:16; Isa 5:24-30,

தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

தலைப்பு இருபத்தைந்து

**தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்கள்**

பொருளடக்கம்-8

முதலாம் உடன்படிக்கை V/S
இரண்டாம் உடன்படிக்கை

8-0 முதலாம் உடன்படிக்கையின் பழைய ஏற்பாடு V/S இரண்டாம் உடன்படிக்கையின் புதிய ஏற்பாடு

8-1 முதலாம் உடன்படிக்கையின் மூலம் செய்யப்படும் ஆராதனைக்கேற்ற வழிமுறைகள், பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருந்து; பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமாக இருந்தது:-

முதலாம் உடன்படிக்கையின் முதலாங்கூடாரம் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமாக இருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியை, ஆவி, ஆத்துமாவில் மரணத்தை உருவாக்கும், செத்தக் கிரியைகள் இல்லாமல் சுத்திகரித்து எப்பொழுதும் பூரணப்படுத்தக்கூடாதவைகள். Heb 8:1-8, Heb 9:1-7, Heb 9:8-15, Heb 10:1-6,

Heb 9:1 அன்றியும், முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது.

Heb 8:4 பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார்; ஏனெனில், நியாயப்பிரமாணத்தின்படி காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே;

Heb 8:5 இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணப் போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்.

Heb 8:6 இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்.

Heb 8:7 அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே.

8-2 இரண்டாம் உடன்படிக்கையின் மூலம் செய்யப்படும் ஆராதனைக்கேற்ற வழிமுறைகள், பரலோகத்தில் உள்ளவைகளுக்கு வரப்போகிற உன்மையான நன்மைகளுக்குரிய , நேரடியான பொருளாக இருந்து, பரலோகத்திற்குரிய பரிசுத்த ஸ்தலமாக இருக்கிறது:-

Heb 9:22 நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.

Heb 9:23 ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே.

Heb 9:24 அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார். Heb 8:1-8, Heb 9:1-7, Heb 9:8-15, Heb 9:16-24, Heb 10:1-6, Heb 10:19-25;

8-3 முதலாம் உடன்படிக்கை, பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், ஆவி, ஆத்துமாவில் மரணத்தை உருவாக்கும், செத்தக் கிரியைகள் இல்லாமல் மனச்சாட்சியை, சுத்திகரித்து எப்பொழுதும் பூரணப்படுத்தமாட்டாது.:-

முதலாம் உடன்படிக்கையின் மூலம் செய்யப்படும் ஆராதனைக்கேற்ற வழிமுறைகள், பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால்,

அவைகளை பழுதுள்ள மிருக பலிகளினாலே செலுத்த வருகிறவர்கள் / தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட இரத்தமும், கடாரியின்

சாம்பலும், பூமியில் உருவாக்கப்பட்ட சரீரத்தை சுத்திகரிப்பு உண்டாகும்படி பரிசுத்தப்படுத்துகிறது:

ஆனால் அவைகள் பரலோகத்தில் இருந்து தேவனால் பூமிக்கு அனுப்பின ஆவி, ஆத்துமாவில், மரணத்தை உருவாக்குகிற செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதலையும் மனச்சாட்சியின் சுத்திகரிப்பையும் எப்பொழுதும் பூரணப்படுத்தமாட்டாது.

Heb 10:1 இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது.

Heb 8:1-8, Heb 9:1-7, Heb 9:8-15, Heb 9:16-24, Heb 10:1-6, Heb 10:19-25;

8-4 கிறிஸ்துவின் மூலம் இரண்டாம் உடன்படிக்கையினால் செய்யப்படும் ஆராதனைக்கேற்ற வழிமுறைகள், செத்தக் கிரியைகள் இல்லாமல் மனச்சாட்சியை, சுத்திகரித்து எப்பொழுதும் பூரணப்படுத்துகிறது:-

கிறிஸ்துவின் மூலம் இரண்டாம் உடன்படிக்கையினால் செய்யப்படும் ஆராதனைக்கேற்ற வழிமுறைகள், பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற உன்மையான நன்மைகளுக்குரிய , நேரடியான பொருளாக இருக்கிறபடியால், ஆவி, ஆத்துமாவில் மரணத்தை உருவாக்கும், செத்தக் கிரியைகள் இல்லாமல் மனச்சாட்சியை, சுத்திகரித்து எப்பொழுதும் பூரணப்படுத்துகிறது

கிறிஸ்துவின் மூலம் இரண்டாம் உடன்படிக்கையினால் செய்யப்படும் ஆராதனைக்கேற்ற வழிமுறைகள், பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற உன்மையான நன்மைகளுக்குரிய , நேரடியான பொருளாக இருக்கிறபடியால்,

தங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் பழுதற்ற ஜீவபலியாக தேவனுக்குப் பிரியமுமானதாக ஒப்புக்கொடுக்கிறபோது; கிறிஸ்துவின் மூலம் பாவத்தை ஆக்கினைத்தீர்ப்பு செய்யும் வழிமுறைகள், ஜீவனுள்ள

தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு: பூமியில் உருவாக்கப்பட்ட சரீரத்தையும்,

பரலோகத்தில் இருந்து தேவனால் பூமிக்கு அனுப்பின ஆவி, ஆத்துமாவில், மரணத்தை உருவாக்குகிற செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதலையும், மனச்சாட்சியின் சுத்திகரிப்பையும், எப்பொழுதும் சுத்திகரிப்பு உண்டாகும்படி பரிசுத்தப்படுத்துகிறதினால் பூரணமாக்கப்படுத்துகிறது.

Heb 9:11 கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும்,

Heb 9:12 வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.

Heb 9:13 அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால்,

Heb 9:14 நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்தக் கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!

Heb 9:15 ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

Heb 8:1-8, Heb 9:1-7, Heb 9:8-15, Heb 9:16-24, Heb 10:1-6, Heb 10:19-25;

8-5 முதலாம் கூடாரமாகிய சரீரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு; இரண்டாம் கூடாரமாகிய நம்முடைய இருதய பலிபீடத்திற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் அதிகாரமில்லை:-

முதலாம் கூடாரமாகிய சரீரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு; இரண்டாம் கூடாரமாகிய நம்முடைய இருதய பலிபீடத்திற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக்/ முதலாம் கூடாரமாகிய சரீரத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரமில்லை.

Rom 7:22 உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன்.
Rom 7:23 ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.

Rom 7:24 நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?
Rom 7:25 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்.

முதலாம் கூடாரமாகிய சரீரத்தை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறதினால், தேவனுக்குப் புத்தியுள்ள ஆராதனை செய்கிறவர்களுக்கு: தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, மனம் புதிதாகிறதினாலே மறுரூபமடைகிறபோது;

நம்முடைய இரண்டாம் கூடாரமாகிய இருதய பலிபீடத்திலிருந்து தேவனால் வெளிப்படுத்தப்படுகிறவைகளை, நம்முடைய முதலாம் கூடாரமாகிய சரீரத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு, நமக்கு தேவனால் அதிகாரம் கிடைக்கிறது.

ஒருவனுடைய முதலாம் கூடாரமாகிய சரீரத்தை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறவர்கள், தங்களை பரிசுத்தஞ்செய்யும்படியாக, எல்லாருக்கும் முன்பாக

பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.

ஆகையால், கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையைச் சுமந்து, தனியாக தேவனிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம். நிலையான நகரம் நமக்கு பூமியிலே இல்லை; பரலோகத்தில் உள்ளவைகளுக்கு வரப்போகிற உன்மையான நன்மைகளுக்குரிய , நேரடியான பொருளையே நாடித் தேடுகிறோம்.

Rom 8:1-8, Rom 8:9-15,Rom 7:22-25, Rom 12:1-8,Heb 13:8-14,

Rom 12:1 அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

Rom 12:2 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

Rom 12:3 அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.

Rom 12:4 ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல,
Rom 12:5 அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.

Heb 13:8 இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

Heb 13:9 பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள். போஜன பதார்த்தங்களினாலல்ல, கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது; போஜனபதார்த்தங்களில் முயற்சிசெய்கிறவர்கள் பலனடையவில்லையே.

Heb 13:10 நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை.

Heb 13:11 ஏனென்றால், எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும்.

Heb 13:12 அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.

Heb 13:13 ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்.
Heb 13:14 நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்.

8-6 முதலாம் கூடாரம் நிற்குமளவும் இரண்டாம் கூடாரமாகிய பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்:-

முதலாம் உடன்படிக்கையின் முதலாம் கூடாரம் நிற்குமளவும், இரண்டாம் உடன்படிக்கையின் இரண்டாம் கூடாரமாகிய பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்.

ஏனென்றால், மலையின் மேல் யார்? முதலாம் உடன்படிக்கையின் நியாயப்பிரமாணத்தின்படி, பரலோகத்திலுள்ளவைகளுக்கு சாயலானவைகளையும், நிழலாட்டமானவைகளையும், ஒப்பானவைகளின் மூலம் இரத்தஞ்சிந்துதலினாலே சுத்திகரிக்கப்படும்

வழிமுறைகளினால்: பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரணபலிகளையும் எழுதிக்கொடுத்தாரோ,

அவரே, மலையின் மேல் அவைகளை நடைமுறைப்படுத்தி, பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற உன்மையான நன்மைகளுக்குரிய நேரடியான பொருளாகிய சத்தியங்களை நிருபித்து வெளிப்படுத்தும் வரை, அவர் எழுதிக்கொடுத்த முதலாம் உடன்படிக்கையின் நியாயப்பிரமாணத்திற்கு பெலன் இல்லை.

Heb 9:8-15, Heb 9:16-24,

Heb 9:8 அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்.
Heb 9:9 அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம்.
Heb 9:10 இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல.

8-7 இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறபடியால் இரண்டாம் உடன்படிக்கையின் மூலம் , இரண்டாம் கூடாரமாகிய பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்:-

தேவனுக்கும் மோசேக்கும் மத்தியில், முதலாம் உடன்படிக்கையை ஏற்படுத்தினவர், தேவனால் ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்காக: நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு,

தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி

நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.

இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறபடியால் இரண்டாம் உடன்படிக்கையின் மூலம் , இரண்டாம் கூடாரமாகிய பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்.

இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின்படி, பரலோகத்திலுள்ளவைகளுக்கு சாயலானவைகளையும், நிழலாட்டமானவைகளையும், இரத்தஞ்சிந்துதலினாலே சுத்திகரிக்கப்படும் வழிமுறைகளினால்: பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரணபலிகளையும்,

கொல்கோதா, மலையின் மேல் தன்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவைகளை நிறைவேற்றி, பரலோகத்திலுள்ளவைகளுக்கு வரப்போகிற உன்மையான நன்மைகளுக்குரிய நேரடியான பொருளாகிய சத்தியங்களை நிருபித்து வெளிப்படுத்தினபடியால்

முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

Heb 9:8-15, Heb 9:16-24,Rom 7:22-25, Rom 8:1-8, Rom 8:9-15,

8-8 முதலாம் ஆதாமின் பாவம் V/S இரண்டாம் ஆதாமின் நீதி:-

மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்: அது போல நித்திய ஜீவனின் கூர் தேவ நீதி. தேவ நீதியின் பெலன் கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியின்பிரமாணம்.

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; அது போல கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியின்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் தேவ நீதி உலகத்திலிருந்தது.

நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் செத்ததாயிருக்குமே, மேலும் மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது: அது போல கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியின்பிரமாணம் இல்லாதிருந்தால் தேவ நீதி செத்ததாயிருக்குமே. மேலும், தேவ நீதி பெருகும்படிக்கு கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியின்பிரமாணம், கிறிஸ்துவின் மூலமாக நேரடியாக வெளிப்பட்டது.

கீழே குறிப்பிட்ட வேத வசனங்களில் பாவம் என்று எழுதியிருக்கிற இடத்தில், தேவ நீதி என்றும் நியாயப்பிரமாணம் என்று எழுதியிருக்கிற இடத்தில், கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியின்பிரமாணம் என்றும்; ஒப்பிட்டு தியானிக்கும்போது தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

Rom 7:8 பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே.
Rom 7:9 முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன்.
Rom 7:10 இப்படியிருக்க, ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக்கண்டேன்.
Rom 7:11 பாவமானது கற்பனையினாலே சமயம்பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது.

8-9 முதலாம் ஆதாமின் பாவம் V/S இரண்டாம் ஆதாமின் நீதி:-

ஒரு மனுஷனுடைய ஒரு கீழ்ப்படியாமையினாலே வந்த மீறுதலின் ஒரே குற்றத்தினிமித்தம்; அநேகர் பாவிகளாக்கப்பட்டு, எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல,

ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே வந்த ஒரே நீதியினால் எல்லா மனுஷருக்கும் அநேக குற்றங்களை நீக்கி நீதிவிளங்குகிறபடியால் நித்திய ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.

Rom 5:10 நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.

Rom 5:11 அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்.

Rom 5:12 இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.

8-10 முதலாம் ஆதாமின் மீறுதலினால், முதலாம் உடன்படிக்கையின் மூலம் பாவிகளுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது:-
ஆதாமின் மீறுதலினால், ஆதாம் முதல் மோசே வரைக்கும்; பாவஞ்செய்யாதவர்களையும் மரணமானது ஆண்டுகொண்டிருந்த படியால், முதலாம் உடண்படிக்கையின் மூலம் பாவிகளுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டு: அவைகளின் நன்மை தீமைகள் மூலம், பாவம் செய்கிறவர்களுக்கு, ஆவி, ஆத்துமா, சரீரத்தில் மரணத்தை ஆளுகை செய்யும் வல்லமைகள் கணக்கிடப்பட்டு, நியத்தீர்ப்புகள் கொடுக்கப்பட்டது.

முந்தின மனுஷனாகிய முதலாம் ஆதாமினால் பாவமும், பாவத்தினாலே ஆவி, ஆத்துமா, சரீரத்தில் மரணமும், உலகத்திலே பிரவேசித்தது: அந்த மரணமானது ஆதாம் முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும்

**பாவம் உலகத்திலிருந்தது, நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.**

**Rom 5:13 நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.**
**Rom 5:14 அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்.**

Exo_31:18; Exo_24:12-18, Exo_32:15-20, Exo_34:1-4, Exo_34:28-29; Deu_4:13-14, Deu_5:22, Deu_9:8-12; Rom_2:14-16; Rom_5:10-14; Rom_5:15-18; Rom_5:19-21; 1Ti_1:7-11;

**8-11** இரண்டாம் ஆதாமின் மரணத்தினால் இரண்டாம் உடண்படிக்கையின் மூலம் கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியின் பிரமாணம் வெளிப்பட்டது:-

முதலாம் ஆதாம் முதல், இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து வரைக்கும், பாவஞ்செய்யாதவர்களையும் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் ஆண்டுகொண்டிருந்த படியால், இரண்டாம் உடண்படிக்கையின் மூலம் நீதிமான்களுக்கு; கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியின் பிரமாணம் வெளிப்பட்டு: அவைகளின் நன்மை தீமைகள் மூலம், தேவ நீதியின் கிரியைகள் செய்கிறவர்களுக்கு நித்திய ஜீவனை ஆளுகை செய்யும் வல்லமைகள் கணக்கிடப்பட்டு, நியத்தீர்ப்புகள் கொடுக்கப்பட்டது.

**Heb 11:1 விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.**
**Heb 11:2 அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்.**

**Heb 11:3 விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.**

**Heb 11:4 விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்.**

**Heb 11:5 விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான்.**

**Heb 11:6 விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.**

**நோவா, ஆபிரகாம், உடன் சுதந்தரராகிய ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, ராகாப் என்னும் வேசி, கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரஞ்சொல்லவேண்டுமானால் காலம் போதாது.**

**Heb 11:39 இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்.**
**Heb 11:40 அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.**

**1Co_15:20-28,1Co_15:45-50,1Co_15:51-58,1Co_15:29-34,1Co_15:35-44,1Ti_2:9-15 ,Heb_9:15-22; Heb_8:7-13; Gal_3:19-26,**

முடிவுரை

மனச் சாட்சியின் மூலம் தேவனை அறிந்தவர்கள் அவருக்கு துதி, கனம், மகிமை ஆகியவைகளை செலுத்தி ஆவியில் பிழைப்பார்கள். மனச்சாட்சி மூலம் தேவனோடு

தொடர்பு கொள்ளும் வழி முறைகளிலிருந்து திசை மாறி, தேவனுக்கு துதி, கனம், மகிமை செலுத்தாதவர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் சொல்லப்படட் எல்லா சாபங்களும் வந்து அவர்களுக்கு பலிக்கும்.

தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவர்கள் மற்றும் தேவனுடைய சித்தத்தை விட்டு வழிவிலகுகிறவர்கள் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் அடிமைப்பட்டு தேவ ஆசீர்வாதங்களை இழக்கிறார்கள்.

வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.

நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவி கொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ, நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள். ஆகையால் ஜாதிகளே கேளுங்கள்; சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்து கொள். பூமியே, கேள்; இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளாமலிருந்து, என் நியாயப்பிரமாணத்திற்கு செவிகொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்; அவர்கள் மேல் நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன்

இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் மூலம் தேவனுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை பெற்றவர்களின் மூன்று நிலைகள். 1 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் 2 தேடுகிறவர்கள் 3 மற்றவர்கள்

1 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் :- தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவ நீதியை அடைந்திருக்கிறார்கள். 2 தேடுகிறவர்கள்:- தேவ நீதியை தேடுகிறவர்களின் ஆவிக்குரிய இடறுதல்களில் விழுந்துகொண்டிருக்கிறார்கள்.

1 தேவ நீதியைத் தேடாமல் தங்கள் சுய நீதியை நிலை நிறுத்த முயற்சி செய்தல்.

2 . நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளின் மூலம் நீதிப்பிரமாணத்தை தேடுவது.

3. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடாமல், பரலோகத்தில் வாசல் கதவுகளை தொடர்ந்து தட்டிக்கொண்டிருப்பது.

4. தேவனுடைய சித்தத்தை செய்யாமல் தங்களது தேவைகள் சந்திக்கப்பட தேவனிடம் கேட்பது.

5. முதலாவது தேவனுடைய நீதியைத்தேடாமல் தங்கள் சுய விருப்பங்களை தேடி அவைகளை அடையும்படி தேவனை நோக்கி கேட்பது.

6. மூலைக்கல்லில் இடறுவதற்கு அறியாமைதான் மூலக்கார ணம் ஏனென்றால் அவர்கள்

தேவ அறிவை வெறுத்தார்கள்.

7. ஆவிக்குரிய வாழ்க்கையில் நற்கிரியைகள் இல்லாத பொழுது அறியாமையின் ஆழத்திற்கு செல்லுவது.

8 இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் உடன் படிக்கையின் மூலம் நற்கிரியைகள் செய்யும் போது அவைகள் எந்த ஒரு மனிதனையும் எந்த சூழ்நிலையிலும் தேவ நிதியை அடைய வழி நடத்தும்

3. மற்றவர்கள்:- சூதும் வஞ்சகமுகமான தந்திரமுள்ள போதகமாகிய பல விதமான காற்றுகளைப் பின்பற்றாமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, தேவன் ஒவ்வொரு அவயவங்களுக்கும் பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்தில் நிலைத்திருந்து, முழு சரீர வளர்ச்சியை ஏற்படுத்தி தேவ சித்தத்தை நிறைவேற்றுவதினால் தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள முடியும் இரு மனமாகிய சந்தேக காற்றை பின்பற்றாமல் ஒரு மனமாகயிருந்து முழு விசுவாசத்துடன் நற்கிரியைகள் செய்து தேவ ஞானத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியும்

இந்த நாள் வரைக்கும் காட்டுக் கழுதைகள் போல தங்கள் மதவெறியின் போதகத்தை பின்பற்றி தன் இச்சையாக திரிந்து கொண்டிருப்பவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமாவில், அறிவு, புத்தி, ஞானம், இவைகளைக் கொடுத்து, தங்களை வழி நடத்துகிற உன்னதமான தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அன்புடன் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்

இந்நாள் வரைக்கும் இவர்கள் தேவ நீதிக்கு கீழ்ப்படியாமல் தங்கள் மனதை கடினப்படுத்தியிருக்கிறார்கள், இவர்கள் நியாத் தீர்ப்புக்கு தப்புவதில்லை இவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து எப்பொழுதும் தீமை செய்வதிலிருந்து மனந்திரும்புகிறார்களோ அப்பொழுது அவர்கள் மீண்டும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும்

தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு இந்த புஸ்தகத்தில் புசிக்க ஏற்றபடி / அவரவர் உட்கொள்ளும் அளவுக்கேற்றபடி / தன்மைக்கேற்றபடி பரிமாறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள். ஆனால் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் ஒரு சிலர் இயேசு கிறிஸ்து ராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை பல ருசியுள்ள தேவ வார்த்தைகளின் தலைப்புகளாக புசித்து, அதன் சுவைகளை உணர்ந்து கொண்டபடியால், ஆவி, ஆத்துமாவில் மறுரூபமடைந்து, தங்களுக்கு கொடுத்த தேவ சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் ஜெயங்கொள்ளுகிறவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டு பரலோக இராஜ்ஜியத்தின் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கும் மணவாளனாகிய கிறிஸ்துவுடன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.. ஆமென்.



இந்து முறைப்படி பூசாரி வம்சத்தில் பிறந்து என் சிறுவயதிலே பெற்றோர் மரணமடைந்ததால், வறுமையின் காரணமாக கோவையில் உள்ள ஒரு அநாதை இல்லத்தில் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டேன். கடந்த நான்பது வருடங்களாக தேவனுடைய வார்த்தைகளைக் கண்டு,கேட்டு, உணர்ந்துகொண்டபடியால்; பரலோக இராஜ்யத்தினுடைய உவமைகளில் உள்ள இரகசியங்களின் நன்மை தீமைகளை பகுத்தறிவதின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை ஆவி,ஆத்துமாவில் புசித்து மறுரூபமடைந்தேன்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகங்களின் தலைப்புகள்

**1.** பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நின்று கொண்டிருக்கிறது. மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது.

2. தேவனுடைய வீட்டிலே நியாயத்தீர்ப்பு துவங்குகிறது

3. தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

**4.** கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களை புசிக்கும் மூன்றுவகையான ஜனங்கள்

5. ஆவி,ஆத்துமாவின் மறுபிறப்பும் சரீரத்தின் உயிர்தெழுதலும்

6. நித்திய ஜீவ வார்த்தைகளினால் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**7.** தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்கள்

**8.** தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்

**9.** பூமியின் நான்கு திசைகளிலிருந்து நான்கு வகையான விசுவாசங்கள்

**10.** இந்த மனுஷகுமாரன் யார்?

11. ஆவிக்குரிய இஸ்ரவேலர்களின்/யூதர்களின் அடையாளங்கள்

12. தேவனும் மனிதனும் கேட்ட எட்டு கேள்விகள்

**13** தேவனுடைய நாமத்தை பின்தொடர்கிற நாண்கு வகையான ஜனங்கள்

**14** ஞான அர்த்தமுள்ள சீயோனின் வெளிப்பாடுகள்

**15** தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.

**16** கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்.

**17** தேவனுடைய இராஜ்யமாகிய ஆயிரம் ஆண்டு ஆட்சியின் தேர்தல் ஆணையம் அறிவிக்கப்பட்டு உபத்திரவ காலத்திற்கு நடைமுறைக்கு வருகிறது.

## 18 கிறிஸ்தவ மதத்தினால் போதிக்கப்பட்ட கற்பனைகள் V/S தேவனுடைய நீதியின் பிரமாணங்கள்

கிறிஸ்தவ மதத்தின் மூலம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனைகளுக்கு; கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவனுடைய நீதியின் பிரமாணங்கள்.

19 கிறிஸ்துவின் மூல உபதேச வசனங்கள் V/S தேவனுடைய நீதியின் பிரமாணங்கள் / கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களுக்கு கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவனுடைய நீதியின் பிரமாணங்கள்.

20 முதலாம் உடன்படிக்கை V/S இரண்டாம் உடன்படிக்கை

21 உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவரின் சாட்சிகள்.

இந்த புஸ்தகங்களின் தலைப்புக்கள் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு,புசிக்க ஏற்**றபடி/ அவரவர் உட்கொள்**ளும் அளவுக்கேற்**றபடி/தன்மைக்**கேற்**றபடி பரிமாறப்படுகிறது.**

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால்** தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள்.

ஆனால் தேவனால் முன் கு**றிக்கப்பட்டவர்க**ளிள் ஒரு சிலர், **இயேசு கிறிஸ்து இராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில்/ ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண** விருந்தில் கலந்து கொண்டு; இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறார்கள்.

அதன் சுவைகளை **உணர்ந்து கொண்டவர்கள்,ஆவி,ஆத்துமாவில்,** மறுரூபமடைந்து: தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுத்த தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆட்சி அதிகாரங்களை பிரதிபலனாக பெற்றுக்கொள்ளுகிறார்கள்.